208

208

ஸர்வஜித் ௵
ஆடி ௴

ஸம்புடம் - 6
ஸஞ்சிகை - 7

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
22 JUL 1947
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: ப்ரசுரிக்குமிடம் :

நெ. 5, ராமஸ்வாமி தெரு, த்யாகராயநகர்,
சென்னை.

3L
இ22ண21,N4
N47·6·7;1
184236.

July 1947
Vol. 6 No. 7

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

		பக்கம்.
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	139
2.	நம் ஸம்ப்ரதாயத்தின் துர்த்தசை	145
3.	ஜீவாத்மஸ்வரூபத்தின் பெருமை	148
4.	செய்திகள்	152
5.	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	154
6.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	155
7.	காமாஸிகாஷ்டகம்	

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்.

1. எழுதி யனுப்பப்படும் வ்யாஸங்கள், மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் சுருக்கமாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும்.

2. ப்சுரப்படுத்தப்படாமல் இருக்கும் வ்யாஸங்க ளெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்படும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்ய வேண்டு மென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடை நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருகிறது. அவகாசம் ப்ராப்தமாகும் பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.

விஶேஷித்த வரவுகள். (1) ம. ரா. ரா. ஸ்ரீ. சூணாம்பேட்டை ஜமீன்தாருடைய நிகழும் ஸர்வஜித் வருஷத்து நன்கொடை ரூ. 120. (2) ஸம்ஸ்க்ருத பாடசாலைக்கென்று ஸ்ரீ மதுராந்தக வாஸிகளான சில ஆஸ்திகர்களால் விடப்பட்டும் தற்காலத்தில் மாடபூசி ஸ்ரீ. உ.வே. ரங்கஸ்வாமி ஐயங்காருடைய பராமர்ஶத்தில் இருந்துவருவதுமான ஹூ ரூபமான சொத்திலிருந்து நிகழும் பஸலியின் ப்ரதம மாஸூல் வருமானமாக ஷை ஸ்ரீ ரங்கஸ்வாமி ஐயங்காரால் கொடுக்கப்பட்ட தொகை ரூ. 56—4—0.

இவை இரண்டும் இதற்கு முன் வர்ஷங்களிலும் க்ரமமாக வந்து கொண்டிருந்தன. ஆனால் அவை ஸ்ரீ ஸந்நிதிக்கு நேராக அனுப்பப்பட்டபடியால், பாடஶாலை கணக்கில் அவை தனியாக பதிவுப் பெறாமல் நின்றுவிட்டன.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

OFFICE OF THE REGISTRAR OF BO[OKS]
2 JUL 1947
MADRAS

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 6	ஸர்வஜித் ஹூ ஆடி மீ	ஸஞ்சிகை 7

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் ।
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ॥"

—:o:—

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகாருண்யோத்திதா ।
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ॥
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் ।

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

—::o::—

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[6-ம் அங்கம்]

[சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி]

[ஸ்ரீ. உப. A V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L.,
அட்வோகேட், திருச்சி.]

தர்க்கன் :—[எதிரே சுட்டிக் காட்டி] ஸ்வாமிந்! வேத ரஹஸ்யங்களான ஸகல உபநிஷத்துக்களுக்கும் உள்ள அந்தரங்க ஹ்ருதயமான அரங்கம், அரங்கன் அருளமுதமே ஸ்வச்ச ப்ரவாஹமும் நாற்புறமும் சூழ்ந்து வெள்ள மிட்டு ஓடுவது போன்ற காவிரி ப்ரவாஹ அலைகளால் சூழப்பட்ட அரங்க நகர் எதிரே தெரிவதைப் பார்க்காமல் பராக்கா யிருக்கலாமோ?

விவேகர் :—[காட்சியுற்று] சோள ராஜன் தோட்டங்களில் ஓடைகளில் செங்கழுநீர் நித்யமாகப் பூத்திருக்கும் பரிமளம் கனத்திருப்பதால் இழுக்கப் பட்டு நன்று நோக்கவில்லை.

[ஹர்ஷம் நிரம்பிய உள்ளத்தோடு]

“ நீரந்த்ர ஸாந்த்ர ஜாலாயத்ருஷ்டி தமஸ்திரோதாந வர்த்மநாம்
அநக்ஷா த்ருஷ்டிப்ரஸரணயதி ஸேவா ஜடதி நீ: ।
யத்ராஸ்தாநி ப்ரணேத்ரி ப்ரணயநீய ஶிரஸா ந
ப்ருதிஸ்தாய தேவத்ருஶ்யா ஸஸ்தரவீ ஶீவதீமதாம் ॥ ”

சிர காலம் யாத்ரை சென்றிருந்ததில், காவேரியையும் மரங்களையும் விட்டுப் பிரிந்து திரும்பி வருகிறவருக்குக் காவேரியைக் காண்கையிலே கண் களும் மனமும் பூரிக்கின்றன. கலாப கலஹங்களால் அரங்கனும் வெளிப் பட்டிருக்க நேர்கையில், அரங்கத்தை விட்டுச் சிர காலம் வெளியே வஸிக்க வேண்டி யிருந்த பொழுதும், ஸ்வாமி காவேரியின் விரஹ மில்லாமல் காவேரிக் கரையில் ஸத்யா காலத்தில் எழுந்தருளி யிருந்தார். பாதுகாஸஹஸ்ரம் பாடி முடிவுக்கு வந்து கொண்டிருக்கும்போது.

‘ ஸநாதேந நிவாஸஸ்ஸ்யாந் ந: ஸஹ்யஜாயா:
ஸந்நிதௌ நியதம் ஸேயம் ஸந்நத்ரைராஜ்ய ப்ரஹ்மாஸ்ரா: । ’

[மறுபடியும் கர்ப்பவாஸத்தை அடியோடு தொலைக்கவல்ல காவேரியின் புண்யமான தடத்தில் ப்ரஹ்ம ப்ராப்தி ஸித்திக்கு மளவில் வஸிக்கும் பாக்யம் பெற்றிருப்பேனாக] என்று 996-ம் ச்லோகத்தில் பாடுகிறார். அப்பொழுது ப்ராஹ்ம முஹூர்த்தம் வரும் ஸமயமாகி யிருப்பதால், திருக்காவேரியில்நீராட்டத் துக்கு எழுந்தருளவேண்டிய அவஸரம் நெருங்கியது. இந்த நாடகம் ரசனை செய்ததும் நடித்துக் காட்டுவதும் அரங்கவாஸிகளான பரமைகாந்திகளின் முன் னிலையில்.

"[illegible]
[illegible] ।"

என்று, நாடகப் காவேரீ த்வீபத்தில் அரங்க மென்னும் ரங்கத்தில் ஆரம்பிக்கப் பட்டது. முதல் அகத்தின் முன்பாகமான விஷ்கம்பத்தில் காமனும் வஸந்தனும் தங்கள் மந்மதோத்ஸவத்தில் காமரஸ போஷகமாகச் செங்கழுநீர்ப் புஷ்ப வாஸனையையும் காவேரியையும் வர்ணிக்கிறார்கள். இரண்டாம் அங்கம் காசியில் நடந்தது. விவேகர் ஆகாஶ ரதத்தில் ஹிமவத்கிரி முதலிய தேஶங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு, மேல் ஸமுத்ரப் பக்கமாகக் கேரளம் வந்து, அநந்த நகர் கடந்து, தாம்ர பர்ணியையும் கடந்து, திருமாலிருஞ் சோலையை ஸேவித்துக் கொண்டு தெற்கே இருந்து காவேரியை அணுகி அரங்கத்துக்கு வருகிறதாக ஸம்விதாநம். ஹம்ஸ ஸந்தேஶத்தில் வடக்கே யிருந்து வேங்கடம் காஞ்சீ முதலிய திவ்ய தேசங்கள் வழியாகத் திருவெள்ளறை ச்வேதாத்ரியை ஸேவித்துக் கொண்டு, அங்கிருந்து,

'[illegible]
[illegible] ।'

என்று தொடங்கி இரண்டு ச்லோகங்களால் காவேரியை வர்ணித்துவிட்டு அரங்க க்ஷேத்ரத்தை வர்ணிக்கிறார். லளிதமும் உதாரமுமான கநக ஸரித்தின் புளிநங்களில் யத்ருச்சையாகக் கேவலம் தம் இச்சையால் ஶேஷன்மீது சயநம். காவேரியின் ப்ரவாஹ அலைகளில் இப்படி ஶேஷஶாயியான அரங்கன் ஶேஷனோடு சேர்ந்து ப்ரதி பிம்பிதனுகப் பல ப்ரதிபிம்பங்கள் கண்ணாடியில் போல் ஸேவிக்கப்படுகின்றன. சயநீயமான இரண்டு நாக்குகளுடைய ஸர்ப்பத்தின் உருவத்தோடு காவேரியின் அலைகள் கூடி யிருந்தாலும், அவை அமுதம் போல் இனிமையாக உள்ளன. கண் பயமின்றி நிராதங்கமாய் நதி ப்ரவாஹ முழுவதையும் பருகி விடுவது போல் பார்க்கிறது. '[illegible]' என்று பெருமாள் விபீஷணனுக்கு அபய மளித்ததும் அந்த ப்ரீதி ரஸத்தால்தான். நேத்ரங்களால் பாநம் செய்தது போல, அகஸ்த்யர் ஸமுத்ரத்தை ஓர் ஆசமநத்தால் பருகியது போல, இங்கே கணக்கற்ற அலைகளில் கணக்கற்ற ஶேஷ ஶயநத்தோடு கூடிய பகவத் விக்ரஹங்களுடன் கண் பாநம் செய்கிறது. பக்தர்களுக்கு ஶேஷனைக் காண்பதில் பயமேது? பக்தர்களுக் கெல்லாம் ஶேஷத்வ காஷ்டையை வஹிப்பவரிட மிருந்து பக்தருக்கு என்ன பயம்? நித்ரையில் காவல் பணி செய்வதில் இரண்டு நாக்குகளையும் திறந்து வைத்துக் கொண்டிருக்கிறு ரென்று '[illegible]' என்பதின் கருத்து. 'த்ரியுகர்' என்று பகவானுக்குத் திருநாமம். [அதாவது மூன்று யுகங்களில் அவதரிப்பவர் என்பது பொருள்.] கலியுகத்தில் அர்ச்சாவதாரங்களுக்குத் தடையில்லை. மூவிரண்டு (ஆறு) குணங்களுள்ளவர் பகவான். இன்னும் ஒரு ரஸப் பொருளும் திருவுள்ளம். த்ரேதாயுகத்தில் ராமவதாரத்தில் இந்த ஶேஷ பீடத்திற்கு எழுந்தருளினது. த்ரேதை, த்வாபரம், கலி ஆக மூன்று யுகங்களாக இங்கே அரங்கத்தில் ஶேஷனிடத்தில் ஶயனித்துள்ளாரென்பது '[illegible]' என்பதால் குறிக்கப்படுகிறது.

[அஞ்ஜலிபந்தத்துடன்]

“ வ நகஶ—ணாஶஸஸவஹரிதாம் வரிதாவஹஶாம்
நய நஶஹஸ்பூடாம் ஶபி தஶம்ஶய ஶம்ஶவதெ ।
ஶ—ஶித ஹ—தாஶ ந ஹூ—ஶித ஶ—ஶ-ஶஶ—ஃவஶஷீ
ஶஶி நி தவிஶ்லஸஸயஶ—ஶவ ஹூவ வண—ஶஸ—யாஃ ॥ ”

இந்த ச்லோகம் ந்யாஸ திலகத்தில் உள்ளது. அதை இங்கே படிக்கிருர். ந்யாஸ திலகத்தில் இதன் அடுத்த ச்லோகமாகிய ‘ஶாஸ்யம் ஶாஸ்யவதா’ என்கிற ச்லோகமும் படித்துளது.

முப்பத்திரண்டு ச்லோகங்கள் உள்ளது ந்யாஸ திலகம். அரங்கன் நியமித்து ப்ரபத்தி விஷயமான இந்த ஸ்தோத்ர திலகம் பாடப்பட்டதாக கடைசி ச்லோகத்தில் ஸாதிக்கப்பட்டது. ஸாங்கோபாங்கமாய் ந்யாஸ வித்யா ஸூக்ஷ்மங்களை யெல்லாம் 32 எண்ணிக்கையுள்ள ச்லோகங்களாக அமைத்ததிலும், 32-பக்தி வித்யைகளுக்கும் விகல்பிக்கவாவது ஸ்வதந்த்ர ப்ரபத்தி வித்யை என்றும், இந்த 32-வித்யைகளையும் விக்நமன்றியில் பூர்த்தி செய்விக்க அங்கப்ரபத்தி என்னும் ந்யாஸவித்யை என்றுங் கருத்து. ‘ஶுவதூா ஸுர க்ஷாஶாஹஜ நஶிஶஸாவாவிஶ—ஶஹஃ’ என்னும் ச்லோகத்தினுல் இக்கருத்து ஸூசிதமாகும். ப்ரபத்திக்குப் பாத்ரமாயிருக்கும் அதிகாரிகள் ஒரு தவறுதல் செய்திருந்தால், அந்தத் தவறுதலைத் தவறுத லென்று காட்டிக் கொடாமல், மேலதிகாரி, ‘மேலே சுண்ணும்பைக் கெட்டியாகப் பூசி உள்ளேயிருக்கும் கரி அழுக்கை வெளியில் தெரியாமல் மறைத்துச் சுத்த வெள்ளைபோல் காணச் செய்வர்’ என்ற வ்யவஹாரத்தை அநுஸரித்து இங்கே ஸாதிக்கிருர். நம்முடைய துஷ்க்ருத்யங்கள் நெருப்பைப் போல் மிக வெப்பமாய் மண்டியெரிவன. இப்பாபாக்நி உலகத்திலேயே எரிந்து பூமி யெல்லாம் கரி படிந்திருக்கிறது. ரங்கபதியின் கருணு கடாக்ஷ ப்ரவாஹங்கள் கங்கா ப்ரவாஹம் போல் வெள்ளை வர்ணமாக வெள்ளமிட்டோடி வந்து உலகம் முழுவதிலும் நம் பாபாக்நி எரிந்ததில் உண்டான கரியையெல்லாம் தெரியாதபடி மேலே வெள்ளைப் பூச்சு பலமாகப் பூசி கரியே தெரியாமல் மறைத்து வெள்ளையாக்கி விடுகிறது.

‘ வ நகஶ—ணாஶஸஸவஹரிதாம்...... நய நஶஹஸ்பூடாம்’—திருக்கண்களிலிருந்து வெண்மையான கடாக்ஷங்களின் ப்ரபை வெள்ளமிட்டு வருகிறது. இந்த வெள்ளைச் சுண்ணத்திற்குக் கலக்க ஜலம் வேணும். கநமான கருணுரஸப் பெருக்குகள் நெஞ்சிலிருந்து ஓடிவருகின்றன. இக்கருணை நீர் வெள்ளம் ஆச்ரிதனுடைய மண்டி எரியும் பாபாக்நி பரிதாபத்தைப் போக்குகிறது. துக்க தாபத்தை அபஹரிக்கும் இச்சை கருணை. பிறர் பரிதாபத்தைஹரிப்பது, தனக்குத் தாபத்தைத் தராதென்று ரஸம். பாபத் தீ மண்டி எரியும்போது கரிப் பொறிகள் ஏராளமாய் உலக மெங்கும் படிந்து கெட்டியாய் உறைகிறது. கநமான கருணை வெள்ளநீர் ஓடிவந்து அக்கரியைக் கழுவுகிறது. கடாக்ஷ வெள்ள ப்ரபா த்ரவ்யம் த்ரவமாய் ஓடிவந்து, கருணை நீருடன் கூடி, மேலே கெட்டியாக வெள்ளைப் பூச்சு பூசிவிடுகிறது. மேலும்:

"தாஸ்யம் லாஸ்யவதாநுசேத்ய மநஸா ரங்கேஶ த்வத்பதே
நித்யம் கிங்கரவாண்யஹம் ந து வயம் நூநம் கதர்யாஶ்ரயா: ।
மீலத்க்ஷாக்ஷி ப்ரூலதாஸ்பூரணி உதீரிதார்த்தாவலீ நாக்ஷரே
வக்த்ரே குத்ஸிதவித்தவதநே பிக்ஷாவிருக்ஷாம் த்ருஶம் ॥"

பெருமாளுடைய கருணை நிறைந்த கடாக்ஷங்கள் நம்மீது வெள்ளமிட்டு அலைத்து மோதுவதை 'அபிதாரம் பயாரம் பவதே' என்று ப்ரார்த்தித்தார். தன்னுடைய வேறொரு தநிகன் முகத்தில் விழித்து யாசிக்கும் தைந்யத்தை அடைய மாட்டா தென்று ப்ரதிஜ்ஞை செய்கிறார். 'என் னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன் றினைக் காணவே' என்னும் பாணநாதன் முடிவு வார்த்தையை நினைப்பூட்டு கிறார். 'ஸவஞ்ச த்ருஷ்டவா நயநே நாந்யம் ஸம்த்ரஷ்டுமுத்ஸஹே'— [உம்மை நீர் கொடுத்த கண்களால் ஸேவித்துவிட்டு, இனி இக்கண்களால் என் பிள்ளை களையோ மற்றொருவரையோ பார்க்க ஸஹிக்கமாட்டேன். இனி எனக்குக் கண் வேண்டாம்] என்றார் த்ருதராஷ்ட்ரர். மற்றொன்றைக் காணவே ஸாத்ய மில்லாதபோது, ஒரு தநாட்யனைத் தேடி அவன் வீடு சென்று, துச்சமான பொருளில் ஆசையால் அவனிடத்தில் பேதை விழி விழிக்க ப்ரஸக்தி ஏது? அரங்கனுடைய அரங்கத்தில் வாக்கும் மனமும் நர்த்தநம் பண்ணவேணும். பாதுகாஸஹஸ்ரத்தின் ப்ரஸ்தாவனையில், வேங்கடேச்வர கவியின் ஸரஸ்வதீ நர்த்தகியைப் போல, இன்றிரவு அம்மா! பாதுகையே! உனக்குத் தொண்டு புரிந்து உன் முன் ஆநந்த நர்த்தநம் செய்யவேணும்' என்று ப்ரார்த்தித்துவிட்டு, க்ரந்தம் தலைக்கட்டி முடியும்போது 'அரங்கத்தை இன்று ஸரஸ்வதீ நாட்ய ரங்க மாகச் செய்துவிட்டாய்' என்று ஸாதிக்கிறார்.

இங்கே, 'லாஸ்யவதா மநஸா த்வத்பதே தாஸ்யம் கர்த்தும் நித்யம் கிங்கர வாணி' என்று பெருமாளை ப்ரார்த்திக்கிறார். 'லாஸ்யம்' என்பது லளிதமான ம்ருது நர்த்தநம். 'தாண்டவம்' என்பது ரௌத்ரமான பைரவ நர்த்தநம். 'என்மனம் ஹர்ஷத்துடன் லளிதமாக நர்த்தநம் செய்து உம் அரங்கத்தில் உம் திருவடிவாரத்தில் ஒழிவில் கால மெல்லாம் உடனாய் மன்னி வழுவிலா வடிமை செய்யும் தாஸ்யத்தை நித்யமும் புரியும்படி அநுமதி செய்து ப்ரேரணம் செய் கிறது' என்று தம் மனத்தின் ஹர்ஷ நர்த்தநத்தைக் கூறுகிறார். இவர் மனத்தின் நர்த்தநம் லளிதமான லாஸ்ய நர்த்தநம். பின்பாதியில், கோபிஷ்டனான பணம் படைத்த ப்ரபுவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் பொரிந்துகொண்டு, அவன் கண்கள் கோபத்தால் ரௌத்ர நர்த்தந சேஷ்டைகள் செய்வதை வர்ணிக்கிறார்.

'குத்ஸிதவித்தவதநே'—ஒரு குத்ஸிதமான பணக்காரனுடைய முகத்தில் அவன் கோபமுகத்தை வர்ணிக்கிறார்.

'மீலத்க்ஷாக்ஷி'—கோபத்தில் கண்களை மூடுகிறான்.

'ப்ரூலதாஸ்பூரணி'—புருவங்கள் துடிக்க. 'உதீரிதார்த்தாவலீ நாக்ஷரே'—

கோபமிகுதியால் திட்டும் வார்த்தைகள் முழு வார்த்தையாக வருகிறதில்லை. ஒரோர் அக்ஷரம்தான் வெளிப்படுகிறது. 'வக்த்ரே' அரங்கள் வக்த்ரம் பரம

ஸௌம்யம். 'காஞ்சீவக்த்ரம்' 'ஜ்யோதிர்வாவாயவ்யம் நிஜமந்தரேண ச த்ராஹிஸம்வ்ருதம்'— இது பயங்கரம்.

[சற்று ஆலோசித்து] இது ஆத்யமான ஸ்தாநம். இன்னும் ஏதாவது கூட்டப்போகிறாயோ?

தர்க்கன்.—[வடக்குத் திக்கில் சுட்டிக்காட்டி] இது பூமிக்குத் தலையாபரணமான துண்டீர மண்டலம். இங்கே ஸத்யவ்ரதம் என்னும் க்ஷேத்ரம் விளங்குகிறது. இங்கே பகவான் தம்முடைய நேர் புத்ரனை ப்ரஹ்மதேவர் செய்த அச்வமேத யாகத்தில் தாமே உலக பாபம் முழுவதையும் தொலைப்பதற்காகப் பேரருளாளனாக அவதரித்தார் இந்தத் தேசத்திலுள்ள பெரியார்க்குப் பிறவியாலேயே பரதேவதா பாரமார்த்ய நிர்ணயம் ஸித்தித்திருப்பது. 'பிறவியாலேயே ஸித்தம்' என்பதால், ஒரு புலஸ்த்யருடைய வரதாநம் வேண்டாதே ஸஹஜ ஸித்தமென்று கருத்து. இங்கு 'ஆத்மைகத்வம்' என்ற ச்லோகம் படிக்கப்பட்டுள்ளது. இதே ச்லோகம் ரஹஸ்யத்ரய ஸாரத்திலும் படிக்கப்பட்டுள்ளது. 'ஆத்மா ஒன்றே, தேவதை ஒன்றே, த்ரிமூர்த்திகளும் ஒன்றே, ஸமமே' என்று ஐக்யம் ஐக்யம் என்கிறார்களே யல்லது ஸர்வாத்மாக்களையும் சரீரமாகக் கொண்டு ஸர்வாத்ம விசிஷ்டமான பரமாத்மா ஒன்றே யென்றும், ஸர்வ தேவதைகளையும் தன் சரீரமாகக் கொண்டு ஸர்வதேவதா ரூப சரீரவிசிஷ்டமான பரதேவதை ஒன்றே யென்றும், இரண்டு மூர்த்திகளைப் பாகத்தில் வைத்துக் கொண்டு அந்த சரீர விசிஷ்டமான ஒரு நடுமூர்த்தி—மத்ய மாதவ மூர்த்தி—ஏக பரதேவதையென்றும், விசிஷ்டைக்யத்தைக் கொண்டு அத்வைத மென்னும் ஐக்யத்தைக் கொள்ளாமல் ஸர்வாநுபவங்களுக்கும் ஸர்வ ப்ரமாணங்களுக்கும் விருத்தமாக எல்லா ஆத்மாக்களும் ஒன்றே யென்றும், அவர்களும் ஈச்வரனும் ஒன்றே யென்றும் ஒரே தேவதைதான் என்றும் கூறுவது நிபுணமல்ல.

விவேகர்:— [ஹர்ஷ கௌரவங்களோடு அஞ்ஜலிபந்தம் செய்து கொண்டு]

" த்ரய்யந்தவிபவிவிஹ்ருதா ஸ்வாநுவாஸ்ய வத்யோதநே
ஸ்தம்பஸ்தம்ப நவேத்யாம் ஸ்புரதி ராஜதே ஹவ்யவாஹ: ।
கல்பஜல்பதிகந்தா ரேகரீகல்பவல்லீ
கல்யதாம் கல்பம் ந: சோபவி காருண்யராசி: ॥ "

இது வரதராஜ பஞ்சாசத்தில் முதல் ச்லோகம். அநந்த ப்ரஹ்மாண்டங்களையும் நிரதிசய ஜ்யோதிர்மயமான மிக விஸ்தாரமான பரமபதத்தையும் மஹத்தான பாற்கடலையும் வாஸஸ்தாநமாகக் கொண்டிருப்பதற்கு இந்த அத்திகிரி ப்ராந்தம் தான் தமக்குச் சிறந்த உகந்த வீடென்று அபிமாநம். உலகத்திற்கும் வேதங்களுக்கும் தர்மங்களுக்கும் ப்ரவர்த்தகரான தம் புத்ரன் செய்த அச்வமேத ஹவிஸ்ஸைப் பெற்றுக் கொள்ளத்தாமே குளிர்ந்த நீலமேக ச்யாமளமான அக்நியாக வேதியில் அவதரித்தார். ஜநகர் யஜ்ஞ வேதியில் ஸீதை யெனும்

தேஜஸ் கருணையே வடிவாக அவதரித்தது போல், அவள் கருணை ஸக்தியால் அக்நி திருவடிக்கு ஸீதளமாயிற்று. இங்கே இக்கருணைக் கடல் தானே ஹவிஸ்ஸைப் பெற்றுக்கொள்ளும் அக்நியாயும், ஸீத ஸ்வபாவமாயும் ச்யாமள வர்ண மாயும் ஆவிர்ப்பவித்த தென்று விசேஷங்கள். குளிர்ச்சிக்கும் கருமை வர்ணத்திற்கும் நேர்விருத்தமான அக்நி என்னும் பேரோடு ஏன் அவதரிக்க வேண்டும் என்பதற்கு 'ஹவ்யவாஹ:' என்கிற அக்நித் திருநாமத்தாலேயே பரிகராங்குராலங்காரத்தால் விளக்குகிறார். 'ஓஷதய: ஸம்வதந்தே', 'ப்ரஹ்மணி த்வா மஹஸ ஓம் இத்யாத்மானம் ஜுஹோமி', 'அஹமேவாஹம் மாம் ஜுஹோமி ஸ்வாஹா' என்று ப்ரத்யக்கான ஆத்மாவையே ஹவிஸ்ஸாக ஸமர்ப்பிக்கையில், வேறு எந்த அக்நி வேதியில் வந்து அதைப் பெற முடியும்? 'ஸுஹுத்யைரயம் ஸுஷாஹோத்ரஹம்' என்றபடி அதாஹ்யமான ப்ரத்யக் பொருள். 'அஹமந்நமஹமந்நம்' என்று முமுக்ஷுக்களும் முக்தரும் பாடுவது. ஸர்வ ப்ரத்யக்கான பரமாத்மா தங்களை ஹவிஸ ஸாக அங்கமாகப் புஜிக்கவேணு மென்ற ஆசையைத் தெரிவிப்பது. 'உனக் காரா வமுதமா யென்னை யுண்டிட்டாய்..............' என்று கடைசியில் ஆழ்வார் கானமும் இவ்வநுபவமே. ஹவிஸ்ஸை வாங்குவதற்கு உத்தரவேதியில் ஆவிர்ப் பவித்த இவ்வக்நியை, பாற்கடலில் தோன்றி அங்கே வஸிக்கும் ஒரு கல்பகக் கொடி அணைந்திருப்பதால், இந்த அக்நி ஒரு பசுமையான கல்பக வ்ருக்ஷமே. இக்கல்பக வ்ருக்ஷத்திற் கேற்றபடி 'கல்பவல்லீகாமயேந' என்றபடி காமதேநு வான 'கல்பயத:' என்னும் க்ரியாபதத்தைக் கூடவே ப்ரயோகிக்கும் அழகு ரஸிக்கத்தக்கது. நாம் நம்முடைய குஸலத்தைத் தேடாமல் தீங்கையே எண்ணுவதும், செய்வதும், தேடுவதுமாயிருந்தாலும், இக்கருணைக்கடல் நம்முடைய குஸலத்தையே என்றும் செய்யும்; அளிக்கும். ஆத்மா என்னும் ஹவிஸ்ஸை இவா அடைக்கலம் கொள்வதை அடைக்கலப்பத்தில் அநுஸந்தித்திருப்பதை அடுத்த ச்லோகத்தில் ஸாதிக்கிறார்.

[தொடரும்]

ஸ்ரீ:

'யாதயாம' ஸப்தார்த்தம்: ஆஹாரங்களுள் எது பாகம் செய்யப்பட்ட பிறகு ஒரு யாம காலத்தை அதிக்ரமித்து இருக்கிறதோ அதை 'யாத யாமம்' என்று ஸாமாந்ய ஜநங்கள் பேசுவார்கள். ஸ்ரீ பாஷ்யகாரர் கீதா பாஷ்யத்தில் இந்தப் பதத்திற்கும் பின் வருமாறு வ்யாக்யாநம் அருளிச் செய்திருக்கிறார். 'யாதயாமம் — சிரகாலாவஸ்திதம்' ['யாம காலம் சென்ற' என்று பொருள் கொள்ளாமல் 'நீண்ட காலம் சென்ற' என்று விவரித்திருக்கிறார்,] இதன் கருத்து என்னவென்றால்: 'எல்லா ஆஹாரங்களும் யாம காலம் சென்றால் தோஷ துஷ்டமாகிறதில்லை யாகையால், அந்தந்தத்ரவ்யங்களுக்கு எவ்வளவு காலம் சென்றால் துஷ்டத்தன்மை வருகிறதோ அவ்வளவு காலம் சென்று' என்பது கருத்து. நிர் வீர்யமாகப் போகும் பர்யந்தம் பார்த்தங்கள் ஸப்தம் என்பதே விவக்ஷிதம்.

ஸ்ரீமதே ஸ்ரீஶடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹா தேஶிகாய நம:

நம் ஸம்ப்ரதாயத்தின் துர்த்தசை.

[ஸ்ரீ. உப. ஒரகடம். கோ. ஸுதர்ஶநாசார்யர், தமிழ்ப் பண்டிதர்,
சைதாப்பேட்டை.]

அநாதி காலமாக நமது தாய தநம்போல் நாம் அநுபவித்து வந்த தேவாலய தர்மங்களும் ஸத் ஸம்ப்ரதாய க்ரமங்களும், விக்டோரிய மஹாராணியார் சட்டத்தை அதிலங்கநம் செய்தும், மஹா ஜநங்களான ஸநாதிகளுடைய அபிப்ராயத்தை மீறியும், ப்ரக்ருதம் அரசாங்கத்தாராக விளங்கி வரும் மந்த்ரிமார்களாலும், அவர்க்கு ஸஹாய பூதர்களான மற்றும் சிலராலும் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டுச் சட்ட பூர்வமாக மாற்றப்பட்டுப் போய் விட்டன. ஆலய ப்ரவேஶ விஷயமாய் ஸநாதநிகளான நாம், பல எதிர்ப்புக் கூட்டங்களை ஏற்படுத்தி, நமது தீர்மாநத்தைப் பலபடி வற்புறுத்தி விண்ணப்பித்துக் கொண்டும், அது கடலிற் கரைத்த காயம்போல் விளக்கம் பெறுதொழிந்தது. பல தேஶங்களில், பல காலங்களில், சில மத நிஷ்டர்கள் மதாந்தரஸ்தர்களுடைய ஆலயங்களை அழித்தும், விக்ரஹங்களை உடைத்தும், ஆபரணம் முதலான ஆலய த்ரவ்யங்களைக் கொள்ளை யடித்தும் வந்ததாகச் சரித்ர வாயிலாய் அறிகிறோம். ஒரே மதத்தை வழிபடுவதாகச் சொல்லிக் கொண்டு அம்மத ஸம்பந்தமான ஆலயம் முதலிய சொத்துக்களில் நீண்ட கால அநுபவத்தால் ஸித்தித்த பாத்யங்களைக் கேவலம் நிர்ப்பந்தத்தினால் விநியோகாந்தரங்கள் செய்ய இதுவரை யாரும் ப்ரயத்நித்ததாகக் கேட்டிலோம். இது கலி காலக் கொடுமை யன்றோ?

மடங்கள் விஷயத்திலோ — மடங்கள் உண்டான நாள் முதல் இது பர்யந்தம் மடாதிபதிகளை அடக்கி ஆள எவரும் யோசித்ததில்லை. ஆசார்யகம் பண்ணும் ஸ்வாமிகளுக்குக் குரு தக்ஷிணை மூலமாகவும் பஹுமாந ப்ரயுக்தமாகவும் த்ரவ்யங்கள் ஏராளமாக ஸித்தித்துள்ளன. அந்த த்ரவ்ய விஷயத்தில் அத்யந்தம் ஸம்பந்த மற்றவர்களான போர்டார்கள் வரவு செல கணக்குகள் கேட்கிறார்களே! இது அதிகாரத்தின் பலம் என்று சொல்வதைத் தவிர்த்து, ந்யாயம் என்று சொல்லப் பொருந்துமோ?

மடாதிபதிகள் தங்கள் மடத்து சொத்துகளைப் பல ஆலயங்களுக்குக் கொடுத்து உபகரித்திருக்கிறார்கள். ஸ்ரீ ஆதிவண் ஶடகோப ஸ்வாமி, அவர்களுள் அந்யதமர் என்னலாம். அந்த ஸ்வாமி ஸ்வயம் யதியா யிருந்த போதிலும், அக்காலத்தி லுள்ள கர்நாடக ஸிம்ஹாஸநாதிபதிகளால் விஶேஷமாகப் பூஜிக்கப்பட்டவர். அவர்களைக் கொண்டு ஆலய நிர்மாணங்களும் மண்டப நிர்மாணங்களும் ஸ்வாமி செய்திருக்க வேண்டும். அத்தகைய கைங்கர்யங்களுள், பெருமாள் கோயிலில் இப்பொழுது விளங்கிவரும் நூற்றுக்கால் மண்டபமும், திருமலைக்கு ஸோபாநமும், ஆழ்வார் திருநகரியில் நம்மாழ்வார் ப்ரதிஷ்டையும் முக்யதமங்கள். ஸ்ரீ ஸ்வாமிக்குப் பின் ஆஸ்தாநத்தை வஹித்த ஸ்வாமிகள்,

தாம் ஸ்வயமாகவும் ஶிஷ்யர்களைக் கொண்டும், திருவெவ்வுளூர் தேவஸ்தானத்திலும், மற்றும் பல திவ்ய தேஶங்களிலும் விஶேஷித்துச் செய்த கைங்கர்யங்கள் பல; நிர்மாணம் பண்ணின மடங்கள் பல. வானமாமலை ஸ்வாமிகள், திருக்குறுங்குடி ஜீயர், ஶங்கர பகவத் பாதாள், இவர்களும் அவ்வப்போது ஆங்காங்குத் தமது ஆர்ஜிதங்களைக் கொண்டு பகவத் ஸந்நிதிகளிலும் மற்றும் பல விடங்களிலும் விஶேஷித்த கைங்கர்யங்கள் பண்ணியிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். இத்தகைய யதிச்ரேஷ்டர்களாலும், ஆஸ்திக ப்ரபுக்களான மஹான்களாலும் பரிபாலிக்கப்பட்டு வந்த தேவாலயங்கள், தொன்றுதொட்டு வந்த ஒரு நியதியி லிருந்து மாறிப் போனது, நமது தேஶத்துக்கும் ஸம்ப்ரதாயத்துக்கும் ஏற்படக்கூடிய துர்த்தஶையை ஸூசிப்பிக்கின்றதன்றோ? நமது மடாதிபதிகளுக்குப் பல ராஜாக்கள் ஶிஷ்யர்கள்; பல ஜமீன்தார்கள் ஶிஷ்யர்கள்; இந்த ராஜதானியிலும், இதற்குப் புறம்பிலும் அநேக பூ ஸம்பத்துக்களும் ஶிஷ்ய ஸம்பத்துக்களும் பெற்றவர்கள்; பூர்வம் ஹிந்து ராஜாக்களால் பஹுமானிக்கப் பட்டவர்கள்; வைதிக ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகர்கள்; பரம ஹம்ஸ பரிவ்ராஜகாசார்யர்கள்; இந்தியா முழுவதும் பரவி யிருக்கிற அத்வைத த்வைத விஶிஷ்டாத்வைத தர்ஶநங்களின் ப்ரதாந ஆசார்யர்களுக்கு ப்ரதிநிதிகளாய் விளங்குபவர்கள். இப்படி யிருக்கிற யதிகளை அநாதரித்து, கேவலம் லௌகிகர்களாயும், பொருட்செல்வம் ஒன்றையே பெரிதாக நினைப்பவராயு முள்ள ஒரு கூட்டத்தார், அவ்யதிகளை மேல் விசாரணை செய்வ தென்பது தடஸ்த க்ருத்ய மாகுமோ?

மடங்கள் ஏற்பட்ட க்ரமமானது கேவல ராஜீய வாதிகளால் அறியக் கூடிய தன்று. எந்த ராஜாவும் ப்ராஹ்மணர்களுக்கு மடங்களைக் கட்டிக் கொடுத்து மடாதிபதிகளை ஏற்படுத்தவில்லை. வைதிக ஸம்ப்ரதாயங்களின் ப்ரதமாசார்யர்கள் ஸந்யாஸிகள்; அவர்கள் பகவத் துல்யர்கள். அவர்கள் ஶைஷ்ட்யத்தையும் வைராக்யத்தையும் கண்டு ஶிஷ்யர்கள் அவர்களை ஆச்ரயித்தார்கள். கால க்ரமத்தில் குருக்களின் பரம்பரையும் அவர்களது ஶிஷ்யர்களும் பெருகலாயின. ஶிஷ்யர்களை அங்கீகரிக்கும் யதிகள் அவர்களின் நிமித்தமாக மடங்களைக் கட்டி, அவற்றைத் தங்கள் ஸ்வார்ஜிதங்களால் ஸம்ரக்ஷணம் செய்து வந்திருக்கிறார்கள். இத்தகைய ப்ரவ்ருத்தி அவர்களது ஸ்வார்த்த ப்ரவ்ருத்தியன்று; ஶிஷ்யார்த்த ப்ரவ்ருத்தியே. ஆசார்யகம் பண்ண வந்த யதிகள், தங்களை வந்தடைந்த ஶிஷ்யர்களிடமிருந்து ஆர்ஜித்த பொருளைக் கொண்டு பகவதாராதநத்துக்காகவும், ஶிஷ்யர்களின் ஸௌகர்யத்தின் பொருட்டும், பூஸ்திதிகளை ஸம்பாதித்தார்கள். அவர்கள் ஸந்யாஸிகளாதலால், தர்ம விருத்தமான வழிகளில் அந்த ஸ்வார்ஜிதங்களை உபயோகப்படுத்தமாட்டார்கள். அத்தகைய ஆசார்யர்கள், தங்களை ஆச்ரயித்த ஶிஷ்ய ரக்ஷணத்துக்காகவும், தங்களால் ஆராதிக்கப்பட்ட தேவதாராதநத்துக்காகவும், ஸம்ப்ரதாய வ்ருத்தியையும் வித்யாபிவ்ருத்தியையும் உத்தேசித்தும், பண்டிதர்களை ஸம்மானிக்கவும், சிஷ்யர்களிடமும், தங்களைப் பஹுமானித்த பிறரிடமும், குரு தக்ஷிணையாகவும் ஸம்பாவனையாகவும் அர்த்தார்ஜநம் செய்து பூஸ்திதிகளை வாங்கினாரகில், அதில் வரவு செலவு கணக்குக் கேட்க யாருக்கு அதிகார முண்டு?

ஆசார்யனது பெருமை சொல்லும் தரத்ததன்று. ஆசார்ய னன்றி மோக்ஷம் கிடையா தென்றும், மோக்ஷோபாயங்களை உபதேஸிக்கின்ற ஆசார்யனே உத்க்ருஷ்டாசார்ய னென்றும் ப்ரமாணங்கள் கூறுகின்றன. இந்த ரூபமான ஆசார்ய க்ருத்யம் செய்யும் மடாத்யக்ஷர்களான ஸந்யாஸிகளின் திறத்தில், நம்மவர்கள் வ்யாஜ்யம் போடுவதும், நம்மவ ரல்லாத ஒரு சாரார் வரவு செலவு கணக்குக் கேட்பதும், அவர்களை ஒரு நிர்ப்பந்தத்துக் குள்ளாக்க நினைப்பதும் என்ன கலிகாலக் கொடுமை! ஆனல் தர்ம கர்த்தர்களான மடாதிபதிகள் வர்ஷாந்தரக் கணக்குகளை ப்ரசுரப்படுத்த வேண்டு மென்பதிலும், அவர்களுடைய கணக்குகள் ஸோதகர்களுடைய (Auditors) பரீக்ஷைக்கு உட்பட வேண்டு மென்பதிலும் யாதோர் ஆக்ஷேபணையு மில்லை. இது அவச்ய கர்த்தவ்யமே. ஆனல் ஓர் அதிகாரிக்குக் கீழ்ப்பட்டு யதிகள் கணக்குச் சொல்வ தென்பதுதான் அதிக்ரமம் என்பதைக் குறிப்பிட வந்தோம். மட த்ரவ்யங்களின் விநியோகம் மடாதிபதிகளை ஆச்ரயித்ததே. அதில் மற்ருெருவர் தலையிடுவ தென்பது தர்ம விரோதம்.

ப்ரக்ருதம் உலகம் குழம்பிக் கிடக்கிறது. அது அதரோத்தர நிலையை அடைந்திருக்கிறது. எங்கும் ப்ராஹ்மண- அப்ராஹ்மணச் சண்டை; தென்மொழி–வடமொழிச் சண்டை; துருஷ்கர்–ஹிந்துக்கள் சண்டை; இதனிடையில் உணவுச் சண்டை. ப்ராஹ்மணனுக்கு ஸர்க்கார் உத்யோக மில்லை; வர்த்தக மில்லை; கைத்தொழி லில்லை. ப்ராஹ்மணருள் ஜமீன்தார்கள் இல்லை; விஸேஷித்துப் பூ ஸ்திதி உள்ளவரு மில்லை; உள்ளதைக் கொண்டு ச்ரமப்பட்டு க்ருஷித்தொழில் புரியலா மென்ருலோ, காலமழை இல்லாததோடு க்ராமக் குடியானவர்களின் அட்டூழியம் சொல்லி முடியாது. ஆலயங்களே ப்ராஹ்மணனுக்கு முடிவான ஜீவந ஸ்தாநங்களா யிருந்துவந்தன. அவைகளும் அவன் துரத்ருஷ்ட வஸத்தால் இப்போது பராதீநமாய்ப் போய்விட்டன. ஏழைப் பார்ப்பான் என் செய்வான்? பாவம்!

தவிர: வடக்கே நடக்கும் அட்டூழியங்களைக் கேட்டாலோ குடல் நடுங்குகின்றது. ஸாதுக்கள் இவ்வித துர்த்தஸையை அடைவதுதான் அவன் திருவுள்ளமோ என்னவோ? ஸரண்யனே கதி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஜீவாத்ம ஸ்வரூபத்தின் பெருமை

[ஸ்ரீ. உப. வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர், சைதாப்பேட்டை.]

ஸ்ரீபகவத் கீதையில் ஆறுவது அத்யாயத்தில் ஜ்ஞாநயோக கர்மயோக ஸாத்யமான ஆத்மாவலோகந ரூப யோகாப்யாஸத்தின் விதி சொல்லப்படுகிறது. அவ்விடத்தில் "யதா தீபோ நிவாதஸ்த:" இத்யாதியால் ஆத்மாவலோகந ரூபமான யோகதசையை ப்ரஸ்தாவித்துவிட்டு, மறுபடியும் அந்தத் தசையை ஆதராதிக்யத்தால் "யத்ரோபரமதே சித்தம்" இத்யாதியான நாலு ச்லோகங்களால் ஸ்ரீகீதாசார்யன் விவரிக்கிறான். அந்த விவரணத்தைப் பார்க்கும்பொழுது 'இந்த ஆத்மாவலோகநமே நிரதிசய புருஷார்த்தமோ?' என்று நினைக்கும்படியாக இருக்கிறது. ஆத்மாவலோகந ரூபமான இந்தப் புருஷார்த்தத்தை அல்பமென்றும், அதில் கால்தாழ்ந்து நின்றுவிடுபவர்களைப் பாக்ய ஹீநர்களென்றும் நமது ஆசார்யர்கள் பேசியிருக்கிறார்கள். ஸ்ரீ தேசிகன் ஓரிடத்தில் இவர்களை, 'நகரத்தின் அழகைப் பார்த்து அநுபவிக்கவேண்டுமென்னும் மநோரதத்துடன் ப்ரயாணமாகப் போகும் ஒருவன், மத்யே மார்க்கத்தில் நல்ல நிழலைக் கொடுக்கும் ஒரு சாயா வ்ருக்ஷத்தைப் பார்த்து, அதனடியில் படுத்து உறங்கினால் எப்படி அவன் ஏமாந்துபோவானோ, அப்படியே இவ்வாத்மாவலோகந ரூபமான யோகத்தில் கால்தாழும் யோகிகளும் ஏமாந்தவர்களே' [நகரம் ஜிகமிஷோர் மார்க்கமத்யே ச்சாயாதருமூல ஸுகாவஸ்தாந துல்யவிளம்ப:'] என்று இகழ்ந்து பேசியிருக்கிறார். நிரதிசய புருஷார்த்தத்துக்குத் துல்யமாக ஸ்ரீ கீதாசார்யன் ப்ரபஞ்சித்திருப்பதை நமது ஆசார்யர்கள் அல்பமென்று விலக்கினதற்குக் காரணம், இந்த ஆத்மாவலோகநத்தால் ஜநிக்கும் ஆநந்தம் அந்தராத்மாவுடன் பகவானை ஸாக்ஷாத்கரிப்பதால் உண்டாகும் பகவத் கதமான ஆநந்தத்தைக் காட்டிலும் எவ்வளவோ நிஹீநம் என்பதுதான். "ஸ மே யுக்ததமோ மத:" [அவன்தான் மற்றை யோகிகள் எல்லாரையும் காட்டிலும் ச்ரேஷ்டன்] என்று அந்த ஜ்ஞாநி புகழப்பட்டிருக்கிறானன்றோ? 'யத்ரோபரமதே' இத்யாதியான கீதா ச்லோகங்களின் அழகைப் பார்ப்போம்.

"யத்ரோபரமதே சித்தம் நிருத்தம் யோகஸேவயா ।
யத்ர சைவாத்மநாத்மாநம் பச்யந்நாத்மநி துஷ்யதி ॥

ஸுகமாத்யந்திகம் யத்தத் புத்திக்ராஹ்யமதீந்த்ரியம் ।
வேத்தி யத்ர ந சைவாயம் ஸ்தித: சலதி தத்த்வத: ॥

யம் லப்த்வா சாபரம் லாபம் மந்யதே நாதிகம் தத: ।
யஸ்மிந் ஸ்திதோ ந து:கேந குருணாபி விசால்யதே ॥

தம் வித்யாத் து:கஸம்யோகவியோகம் யோகஸம்ஜ்ஞிதம் ।
ஸ நிச்சயேந யோக்தவ்யோ யோகோ நிர்விண்ணசேதஸா ॥ "

[எந்த யோகத்தைச் செய்யுங்காலத்தில் இதுதான் அதிஶயித ஸுகத்தைக் கொடுக்கும் யோகமென்று மற்றை ஒன்றிலும் ப்ரவ்ருத்தி உதயமாகாதபடி சித்தமானது ரமிக்கின்றதோ, எந்த யோகத்தைச் செய்யுங்காலத்தில் மநஸ்ஸால் ஆத்மாவைப் பார்த்துக்கொண்டு மற்றை ஒன்றிலும் ஆசையின்றிக்கே ஆத்மாவினிடத்திலேயே மநஸ் ஸந்தோஷத்தை அடைகின்றதோ, எந்த யோகத்தைச் செய்யுங் காலத்தில் இந்த்ரியங்களுக்கு எட்டாததும் புத்தி ஒன்றாலேயே க்ரஹிக்கத்தகுந்ததுமான ஆத்யந்திக ஸுகத்தை அந்த யோகி அநுபவிப்பானோ, எந்த யோகத்திலிருக்குங் காலத்தில் அதனால் உண்டாகும் ஸுகாதிரேகத்தால் அதன் தன்மையிலிருந்து நழுவாமலிருக்கிறானோ, எந்த யோகத்தைச்செய்தால் அதிலிருந்து எழுந்த பிறகும் அதையே இச்சித்துக் கொண்டு மற்றை ஒன்றையும் அதைக் காட்டிலும் உயர்ந்த லாபமாக எண்ணமாட்டானோ, எந்த யோகத்தைச் செய்தால் அந்த யோகத்தைச் செய்துகொண்டிருக்கும்பொழுதோ அதிலிருந்து எழுந்த பிறகோ பெரிய துக்கம் ஸம்பவித்தாலும் அதனால் அந்த யோகத்திற்கு விருத்தமான க்லேஶத்தை அடையாமலிருப்பனோ, அப்படிப்பட்ட யோகத்தையே துக்க ஸம்யோகத்தை வரவொட்டாமல் தடுக்கும் த்யாந மென்று அறி. அப்படிப்பட்ட யோகத்திலேயே, இந்த யோகத்தில் ப்ரவர்த்திப்பவர்கள் நிச்சித புத்தியுடன் நல்ல ஸந்தோஷத்துடன் கூடிய மநஸ்ஸை அடைந்து ப்ரவர்த்திக்கவேண்டும்.] இதை விட உயர்ந்த ஆநந்தமும் உண்டோ என்றே இதைப் படிக்கும் நமக்குத் தோன்றுகிறது.

“யத்ர நாந்யத் பஶ்யதி நாந்யச் ச்ருணோதி நாந்யத் விஜாநாதி ஸ பூமா”

[எந்தப் பரப்ரஹ்மத்தை அநுபவிக்கும் காலத்தில் மற்றை ஒரு அநுபவமும் தெரியாமலிருக்கிறதோ] என்று வர்ணிக்கப்பட்டிருக்கும் பரப்ரஹ்ம லக்ஷணத்திற்கு எந்த அம்ஶத்தில் இவ்விடத்தில் சொல்லப்பட்டுள்ள லக்ஷணம் குறைந்திருக்கிறது? ‘யந்ந து:கேந ஸம்பிந்நம்’’ [எது துக்கத்துடன் கலசாமலிருக்கிறதோ] என்று வர்ணிக்கப்பட்டுள்ள ப்ரஹ்மாநுபவத்தைக் காட்டிலும், எப்படி இவ்விடத்தில் சொல்லப்பட்டுள்ள அநுபவமானது குறைந்ததென்று சொல்லக்கூடும்? இந்த அநுபவத்தை அல்பமென்று சொல்ல மநஸ் கூசும் போலத் தோன்றுகிறது.

உயர்வற உயர் நலமுடைய ஆழ்வாரும் ஜீவாத்மாவின் நேர்மையை அநுபவித்துச் சில பாசுரங்களை அநுக்ரஹித்திருக்கிறார். அவரும் இந்த அநுபவத்தைப் பெரியதொரு புருஷார்த்தமாகவே புகழ்ந்து பேசியிருப்பதைக் காணலாம். ‘ஆழ்வார் பகவானுடைய கல்யாண குணங்களில் இழிந்தவரன்றோ? அப்படிப்பட்டவருக்கு ஜீவாத்ம ஸ்வரூபத்தில் எப்படி ப்ரவ்ருத்தி ஸம்பவித்தது? பகவத் ப்ரவணர்களுக்கு ஜீவாத்ம ஜ்ஞாநம் அவிஷய மன்றோ?’ என்று ஒரு ஶங்கை ஜநிக்கலாம். இதற்கு ஸமாதாநத்தை வ்யாக்யாதாக்கள் பின் வருமாறு வெளியிட்டிருக்கிறார்கள்:

“ஆழ்வார் நித்ய ஸம்ஸாரியாகப் போந்த தாம் அங்குத்தைக்கு அயோக்யரே என்று நினைத்து அகலுவார் போலத் தெரிந்தது. அதைப் பார்த்த

ஸர்வேச்வரன், நிகர்ஷா பாதகமான இந்த விரோதி வந்தேறி யென் பதை ஆழ்வாருடைய திருவுள்ளத்தில் விதிதமாகச் செய்யவேண்டு மென் றெண்ணி, ஜீவாத்மா தனக்கு ப்ரகாரமாயிருக்கிறபடியை யும், ஆத்ம ஸ்வரூபம் தன்னை ஆச்ரயித்திருக்கு மென்கைக்கு உறுப் பாகத் தான் சேதநர்களுடைய ஹ்ருதயத்தில் இருக்கிற இருப்பையும், ஸ்வ ப்ரகார பூதனான ஆத்மாவினுடைய துரவகமத்வத்தையும், இப்படிப் பட்ட ஆத்மாவுக்குத் தன் பக்கல் ப்ரத்யாஸத்தி ஒன்றே உஜ்ஜீவநஹேது வென்னு மிடத்தையும் ப்ரகாசிப்பித்தான். "[illegible]" என்றும் பிராட்டிமாரோபாதி யன்றோ ஜீவாத்மாவுக்கு ஸத்ரு ஶம்? இவ்விதம் ஆத்மா நிர்த்துஷ்ட மென்பதை ப்ரகாஶிப்பித்தான். இந்தக் காரணத்தால் ஆழ்வார் ஆத்மாவின் அநுஸந்தாநத்தில் ப்ரவர்த் திக்கும்படி நேர்ந்தது."

இது தான் வ்யாக்யாதாக்களால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள ஸமாதாநம். பகவத் ப்ரஸாதத்தாலேயே தாம் இவ்வாத்ம வஸ்துவை அறிந்தோ மென்பதும், பகவத் ப்ரஸாத மின்றிக்கே அதை அறிவதோ, அதை அறிந்தாலும் அதை ஸாக்ஷாத் கரிப்ப தென்பதோ, ஒரு பொழுதும் ஸாத்யமில்லை யென்பதே ஸ்ரீ ஆழ்வாருடைய நம்பிக்கை. ஸ்ரீ ஆழ்வாருடைய பாசுரத்தைக் கவனிப்பபோம்.

" நின்ற வொன்றை யுணர்ந்தேனுக் கதனுள் நேர்மை யதுவிது வென்(று)
ஒன்று மொருவர்க் குணரலாகா துணர்ந்தும் மேலுங் காண்பரிது
சென்று சென்று பரம்பரமாய் யாது மின்றித் தேய்ந்தற்று
நன்று தீதென் றறிவரிதாய் நன்றாய் ஞானங் கடந்ததே."

[திருவாய்மொழி 8—8—5]

[பதவுரை] நின்ற ஒன்றை—[நச்வரமான அசித்போல் அன்றிக்கே] நித்யமான ஆத்ம வஸ்துவை, உணர்ந்தேனுக்கு-[பகவான் தனது ப்ரகாரமாகக் காட்டக்] கண்டுகொண்ட எனக்கு, அதனுள் நேர்மை - அதன் ஸூக்ஷ்மமான வைலக்ஷண்யம், ஒன்றும் - ஒருவிதத்திலும், ஒருவர்க்கு-ஒருவருக்கும் [நிஷ்பந்ந ஜ்ஞாநராய் இருப்பவர்க்கும்], அது இது என்று-அது இப்படிப்பட்ட தென்று, உணரலாகாது - அறியப்போகாது; [ஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கும் ச்ரவணம் மநநம் முதலியவைகளால் அறிய முடியாது என்றபடி.] உணர்ந்தும்-[வருந்தி] அறிந்தாலும், மேலும் காண்பரிது - [அஷ்டாங்கயோகம் ஸித்தித்தா லும்] ஸாக்ஷாத்தாகத் தர்ஶிக்க அரிதாயிருக்கும்; பரம்பரமாய்- ஒன்றுக்கொன்று மேலாய், சென்று சென்று - போய்ப் போய், யாதும் இன்றி-ஒன்றுமின்றியே [அவற்றின் விகாரம் முதலிய ஸ்வபாவ மின்றிக்கே], தேய்ந்து - மிக வும் ஸூக்ஷ்மமாய், அற்று - [அத்துடன் ஸம்பர்க்கம்] அற்று, நன்று தீது என்று அறிவு அரிதாய்-[அப்ராக்ருத வஸ்துவானபடியால்] நன்றென்றும் தீதென் றும் அறியவொண்ணாதே, நன்று ஆய் - ஜ்ஞாநத்தின் வைலக்ஷண்யத்தையும் உடைத்தாய், ஞானம் கடந்ததே - ஞாநத்திற்கு எட்டாதிருக்கும்; [இந்த்ரியங்க ளாலே கிடைக்கும் ஜ்ஞாநத்துக்கு எட்டாதிருக்கும் என்றபடி.]

'ஆத்மவஸ்துவானது ப்ரக்ருதி முதலிய அசேதநத்தைக் காட்டிலும் விலக்ஷணம்; ஆகையால் இந்த்ரியங்களால் அதை அறிய முடியாது. அதை யோகத்திலே ப்ரத்யக்ஷிக்கையும் அரிது. எம்பெருமானுடைய காருண்யத்தால் மாத்ரம் அதை ஸாக்ஷாத்கரிக்கலாம்' என்பதுதான் இப்பாட்டின் பொருள்.

'சென்று சென்று பரம்பரமாய் யாதுமின்றித் தேய்ந்தற்று'– 'ப்ராக்ருத பதார்த்தங்களில் தென்படும் தோஷ மொன்றும் இல்லாதபடி'. தைத்திரீய உபநிஷத்தில் ஆத்ம வஸ்துவின் ஸ்வரூபம் பின் வருமாறு விளக்கப்பட்டிருக்கிறது:- அந்ந மயங்களான பதார்த்தங்கள் சில உண்டு; அவை ஆத்மாவன்று; அந்த ஆத்ம வஸ்து ப்ராணமயமு மன்று; மநோமயமு மன்று; இவையெல்லாம் நச்வரங்கள்; விகாரத்துக்கு ஆஸ்பதமானவை; அப்படிப்பட்ட தோஷ மொன்று மிராதது ஆத்ம வஸ்து. [அந்த உபநிஷத்தில் இதற்கு மேல், அந்த ஆத்மாவைக் காட்டிலும் விலக்ஷணமானது ஒன்றுண்டு; அது தான் ஆநந்த மயனுன பரமாத்மா வென்று சொல்லப்பட்டிருக்கிறது. அது இவ்விடத்தில் விவக்ஷித மில்லை.] 'பரம்பரமாய்' எனும் சொல் அந்த ப்ராணமநோமய பரம்பரையைத் தான் குறிக்கிறது. இப்படி அத்யந்தம் விலக்ஷணமான ஆத்ம தத்வத்தின் பெருமையைப் பேசி, அது யோகிகளுக்குக் கூட அறிய எட்டாத தென்றுஅதன் துரவகமத்வத்தை ஸ்ரீ ஆழ்வார் அநுபவிக்கிறார். அந்நமய ப்ராணமய மநோமய பதார்த்தங்களுக்கு ஒன்றுக் கொன்று நெடுவாசியிருக்கச் செய்தேயும், அவை யெல்லாம் இந்த்ரிய கோசரங்களென்று அவைகளுக்கு ஏகப்ரமாண கம்யத்வ ரூப ஸாம்யமுண்டு; ஆத்மா அதீந்த்ரிய மாதலால், அந்த ஸாம்யமும் இதற்கு இல்லையாம்; அவ்வளவு விலக்ஷணமாம். இம்மாதிரி ஜீவாத்ம ஸ்வரூபத்தின் பெருமை ஸ்ரீ ஆழ்வாராலும் ச்லாகித்துப் பேசப்பட்டிருக்கின்றது.

"பெருமாள் வநத்துக்கு எழுந்தருள என்று புறப்பட, ஜாபாலி மீண்டு புகுரும்படிக் கீடாகச் சிலவற்றைச் சொல்ல, பெருமாள் சிவட்கென்று செவியைப் புதைத்து, "வாராய், என் முன்னே நின்று தர்மருசி குலையும்படிக் கீடாக நாஸ்திக வாதம் பண்ணுவதே! உன்னை வெறுக்கிற தென்? உன்னைக்கொண்டு கார்யங்கொண்ட ஐயரையன்றே வெறுப்பது?" என்ன, "நாயன்றே, நீர் மீண்டெழுந்தருளித் திருவபிஷேகம் பண்ணியருளி, ஸ்ரீபரதாழ்வான் கண்ணிலே கண்ணநீரை மாற்றனவாறே நான் நாஸ்திகனைகை தவிர்ந்து ஆஸ்திகனும்படி பாரீர்" என்ன, அவ்வளவிலே இவனை 'ஜாபாலிர் ப்ராஹ்மணோ த்விஜ:' என்றார்களிறே. நாங்களு மெல்லாம் நூலிட்டிருக்கையாலே ப்ராஹ்மண ரென்று கொள்ளு மித்தனை; ப்ரஹ்மஸம்பந்தீ- ப்ராஹ்மண: இறே. ப்ராஹ்மண னாகிறான் ப்ரஹ்ம ஸம்பந்தியானவனிறே. அதுள்ளது இவனுக்கெயிறே. இவ்வளவிலே லோகாயத (பௌத்த) மதத்தை உபந்யஸித்தா னொருவனிறே."

189236

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

செய்திகள்.

1

ஸ்ரீ தில்லஸ்தாநம் ஸ்வாமியின் ஸங்கல்ப மஹோத்ஸவம்.

ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தா சார்ய ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வ பௌம தில்லஸ்தாநம் ஸ்ரீ சடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகனுடைய ஸ்ரீஸங்கல்ப மஹோத்ஸவம், ‘சிற்றெயிற்று முற்றல் மூங்கில் மூன்று தண்டர் ஒன்றினர், அற்ற பற்றர் சுற்றி வாழும் அந்தணீர்’ அரங்கமாநகரில், ஸ்ரீ தசாவதார ஸந்நிதியில், வெகு ஸம்ப்ரமமாக நடைபெற்றது. உள்ளூர் ஸ்ரீ வைஷ்ணவர்களும், ஸ்ரீ ஸ்வாமியின் ப்ரஸாதம் லபதமாகும் பொருட்டே சென்னை முதலிய இடங்களினின்றும் எழுந்தருளி யிருந்த ஸ்ரீ வைஷ்ணவர்களுமாக ஸுமார் 50-திருநாமங்கள் ஸேவை ஸாதித்தனர். ௸ மஹோத்ஸவம். பகல் 2-மணிக்கு முடிவுற்றுத் ததீயாராதநமும் நன்கு நடந்தேறியது.

ஒரகடம். கோ. ஸுதர்சந தாஸன்.

* * * *

2

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸபை, தேரழுந்தூர்.

௸ ஸபையின் ஆதரவில், ஸ்ரீ ஆமருவியப்பன் ப்ரஹ்மோத்ஸவத்தில், வித்வத் ஸதஸ் ஒன்று ஐந்து நாட்கள் [4–6–47 முதல் 8–6–47 வரை] சிறந்த பேரறிஞர்களைக் கொண்டு நடத்தப்பட்டது. இந்த ஸதஸ்ஸுக்குத் தலைமை வஹித்து, இதனைச் சிறப்புடன் நடத்தி வைத்தவர், ஸ்ரீ. உப. T. S. ஸுந்தரம் ஐயங்கார் ஸ்வாமி, B.A., L.T. இந்த ஸதஸ்ஸில் உபந்யஸித்த வித்வான்களின் திருநாமங்கள் :—ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, M.A., L.T. வித்வான் திருவையாறு; ஸ்ரீ. உப. ப. ரெ. திருமலை ஐயங்கார் ஸ்வாமி, தமிழ் வித்வான், கார்யதர்சி, திருவல்லிக்கேணித் தமிழ்ச் சங்கம்; ஸ்ரீ. உப. T. R. V. சர்மா ஸ்வாமி, ஸ்ரீரங்கம்; ஸ்ரீ. உப. பகவத் விஷய ராமாயண பூஷணம் வித்வன்மணி வேங்கடவரதாசார்ய ஸ்வாமி; ஸ்ரீ. உப. சேட்லூர். புரிசை ஸ்ரீநிவாஸ ராகவாசார்ய ஸ்வாமி, திருக்குடந்தை; ஸ்ரீ. உப. ஸ்ரீமுஷ்ணம் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி; ஸ்ரீ. உப. கடாம்பி சடகோபாசார்ய ஸ்வாமி; ஸ்ரீ. உப. கடாம்பி கோபாலையங்கார் ஸ்வாமி முதலியோர். இந்த ஸ்வாமிகளின் உபந்யாஸங்கள் பூர்த்தியடைந்த பின்னர், அக்ராஸநர் ௸ வித்வாங்களுக்கு வந்தனோபசாரம் கூறியருளினார். பிறகு மங்கள கீதத்துடன் ஸதஸ் முடிவுற்றது. இவ்வூர் ஸ்ரீ அஹோபில மடத்தில் ஸுமார் 7-மாத காலமாய் நடத்தப்பட்டு வந்த ஸ்ரீமத் ராமாயண காலக்ஷேபத்தில், ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனுடைய பட்டாபிஷேக மஹோத்ஸவம், 11–6–47 புதன்கிழமை யன்று வெகு ஸம்ப்ரமமாக நடந்தேறியது.

கடாம்பி. R. நரஸிம்ஹ தாஸன்,
(கார்யதர்சி)

* * * *

3

ஆலய ப்ரவேசச் சட்டமும் நமது கடைமையும்.

விலக்கப்பட்ட வகுப்பின ரென்று சொல்லப்பட்டு வரும் ஹரிஜநங்கள், இதர ஹிந்துக்கள் போல ஆலயங்களில் ப்ரவேசிக்கலா மென்றும், அதைத் தடுக்க ஒருவருக்கும் உரிமை யில்லை யென்றும், அப்படித் தடுத்தால் முதல் எடுப்பில் அபராதமும் பிறகு தண்டனையும் விதிக்கப்படு மென்றும் ஆலய ப்ரவேசச் சட்டம் குறிப்பிடுகிறது. ஷை சட்டத்தை அநுஸரித்து ஜூன் மீ 2௳ முதல் அநேக ஆலயங்களுக்குச் சில ஹரிஜநங்கள் மற்ற ஹிந்து மக்களுடன் கூடிக் கலந்து போய்க்கொண்டிருக்கிறார்க ளென்று தெரிய வருகிறது. நம் மடத்தின் ஆதீநத்துக் குட்பட்ட திருவெவ்வுளூர் ஸ்ரீ வீரராகவன் ஸந்நிதியிலும், திருமலை ஸ்ரீநிவாஸன் ஸந்நிதியிலும், ஹரிஜநங்கள் உட்புகுந்தார்களென அறிகிறோம். இவ்வாறு அவர்கள் செய்வதை இனித் தடுக்க முடியாது. இச்செயல் முற்றிலும் ஸநாதந தர்மத்துக்கு விரோதமாகவும், தொன்று தொட்டுவந்த ஆசாரங்களுக்கும் ஒழுக்கங்களுக்கும் விரோதமாகவும் இருக்கிறது. ஹிந்து மதஸ்தர்கள் எல்லோரும் ஒற்றுமையாக வாழவேண்டு மென்னும் கருத்துடன் இச்சட்டம் கொண்டுவரப்பட்டதாம். விலக்கப்பட்ட வகுப்பினரை நாம் சேர்த்துக் கொள்ளாவிட்டால், அவர்கள் மகம்மதியர்கள் ஆய்விடுவார்களாம்; ஆனதால், இம்மாதிரியான ஒரு சட்டம் ஏற்படுத்தப்பட்டு, அது அவச்யம் அமுலுக்கு வரவேண்டுமென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள். இக்கூற்றுக்க ளெல்லாம் துர்வாத மென்பதில் ஸந்தேஹ மில்லை. ஆராய்ந்து பார்த்தால், நம் ப்ராஹ்மண வகுப்பினரை ஒழிக்கவும், நம் மதத்தைத் தூஷிக்கவும், சாரதா சட்டம் ஆலய ப்ரவேச சட்டம் ஆகிய இச் சட்டங்கள் ஏற்பட்டனவே யன்றி வேறில்லை யென்று சொல்லவேண்டும். நம் மதத்தில் பேருக்கு மாத்ரம் இருந்து கொண்டு, அதில் சொல்லி யிருக்கும் அநுஷ்டாநத்துக்குக் கட்டுப்படாமல், ப்ராஹ்மணர்களை த்வேஷித்து அவர்களுக்கு ஹாநியையும் கௌரவக் குறைவையும் ஏற்படுத்த எண்ணி யிருப்பவர்களும், ஹிந்து மத த்வேஷிகளுமே ஒன்றுசேர்ந்து இம்மாதிரி சட்டங்களைச் செய்திருக்கிறார்கள். இதில் ஜாதி மத வேறுபாடுகளை அடியோடு ஒழிக்கவேண்டு மென்பது ஒரு சாரார் கொள்கை. அந்தக் கொள்கையை நிறைவேற்ற ஸர்க்கார் ஒரு சட்டம் கொண்டு வரவேண்டு மென்றும், இனி எல்லா ஜாதியாரையும் 'ப்ராஹ்மணர்கள்' என்று வ்த்யாஸ மின்றிச் சொல்ல வேண்டு மென்றும், வாஸவ மேனன் என்பார் எழுதி யிருக்கிறார். மஹாத்மா காந்தி எனப்படும் பெரியார், எல்லோரையும் 'பங்கி' என்று கூப்பிடுவது தான் ந்யாயம் என்று சொல்லுகிறார். இப்படி, பகவத் ஸ்ருஷ்டமான ஜாதியை ஒழிக்க முடியுமா? வென்பது ஒரு கேள்வி. இப்பொழுது அமுலுக்குக் கொண்டு வரப்பட்ட அக்ரம சட்டத்தைப் பற்றி ப்ராஹ்மண ஸமூஹத்தார் எல்லாரும் வழக்கம்போல் தலை வணங்கி, ஹரிஜந ப்ரவேசமான கோயில்களில் தாங்களும் சேர்ந்துகொண்டு பூஜை புரஸ்காரம் செலுத்துவது, அவர்கள் ஸ்வரூபத்துக்கும் சாஸ்த்ரத்திற்கும் விருத்தமாகையால், அடியேனுக்குத் தோன்றிய சில யோஜனைகளை இங்குக் குறிப்பிடுகிறேன். அவைகளை ஆராய்ந்து, ஒப்புக்கொள்ளத் தகுமானால் அம்மாதிரி செய்யவேணுமாய் ப்ரார்த்திக்கிறேன்:

1. சென்னை ராஜதாநியில் ஆங்காங்கு அடிக்கடி ஸபைகளைக் கூட்டி, இந்த ஆலய ப்ரவேச சட்டத்தை ரத்து செய்யத் தீர்மாநங்கள் செய்து, அவைகளை அதிகாரிகளுக்குத தெரிவித்தல்.

2. ஆலய ப்ரவேச சட்டம் ரத்தாகும் வரையில் ஆலயங்களுக்குப் போவதையும் உத்ஸவாதிகளில் கலந்து கொள்வதையும் உபயங்கள் செய்வதையும் நிறுத்திக் கொள்ளுதல்.

3. பெரியோர்களின் அநுஷ்டாநங்களை அடி யொற்றி சாஸ்த்ர ரீதியாகக் கர்மாநுஷ்டாநங்களை விடாமல் செய்தல்.

4. நம் சிறுவர்களுக்கு, மேனாட்டு வழக்கங்களை விட்டு, முக்யமாக ஸந்த்யா வந்தநம் காயத்ரீ ஜபம் இவைகளைத் தவறுமற் செய்யும்படி வற்புறுத்துதல்.

5. ஒவ்வொரு அகத்திலும் பகவதாராதநம் தினந்தோறும் தவறுமல் செய்தல்.

6. ஸ்த்ரீகளுக்கும் பாலர்களுக்கும் நம் மதத்திலுள்ள முக்யாம்சங்களை எடுத்துக் காட்டிக் கற்பித்து ஒழுகும்படி செய்தல். ஸஹஸ்ர நாமம் ஸ்தோத்ர பாடம் முதலிய வற்றைத் தினம் பாராயணம் செய்தல். இம்மாதிரி அநுஷ்டாநங்களைச் செய்துகொண்டு, நாம் ஸத்வ்ருத்தத்தில் நடந்து வந்தால், நமக்கு நன்மை ஏற்படுவதன்றி, ஸநாதந தர்மமும் ஓங்கி வளரும் என்பதற்கு ஐயமில்லை.

திருப்பாப்புலியூர்,
16—6—47.

வங்கீபுரம். துரைஸாமி ஐயங்கார்,
(வக்கீல்)

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்.

ஸர்வஜித் ௵ ஆவணி (ஸிம்ஹ) ௴.

1௳	ஞாயிற்றுக்கிழமை	... சூந்ய திதி. ஸிம்ஹ ரவி 4–53 ; ஸங்க்ரமண தர்ப்பணம்
2௳	திங்கட்கிழமை	... ஸிம்ஹ சுக்ல த்ருதீயை திதி
9௳	திங்கட்கிழமை	... ஸிம்ஹ சுக்ல தசமி திதி
10௳	செவ்வாய்க்கிழமை	... அதிதி
11௳	புதன்கிழமை	ஸிம்ஹ சுக்ல ஏகாதசி திதி ; ஸர்வ ஏகாதசீ வ்ரதம்
13௳	வெள்ளிக்கிழமை	... ருக் உபாகர்மம்
22௳	ஞாயிற்றுக்கிழமை	... முநித்ரய – வைகாநஸ ஸ்ரீ ஜயந்தீ
23௳	திங்கட்கிழமை	... ஸ்ரீ பாஞ்சராத்ர ஸ்ரீ ஜயந்தீ : ஸ்ரீ மடத்து ஸ்ரீ ஜயந்தீ
24௳	செவ்வாய்க்கிழமை	... ஸிம்ஹ க்ருஷ்ண நவமி – தசமி திதி த்வயம்
25௳	புதன்கிழமை	... ஸிம்ஹ க்ருஷ்ண ஏகாதசி திதி
26௳	வியாழக்கிமை	... ஸர்வ ஏகாதசி வ்ரதம் : த்வாதசி திதி
29௳	ஞாயிற்றுக்கிழமை	... ஸர்வ அமாவாஸ்யை
30௳	திங்கட்கிழமை	... ஸிம்ஹ சுக்ல ப்ரதமை திதி
31௳	செவ்வாய்க்கிழமை	ஸிம்ஹ சுக்ல த்விதீயை திதி : ஸாமோபாகர்மம்

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌯𑍋𑌽𑌨𑍍𑌤𑌃 𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑍍𑌯 𑌮𑌮 𑌵𑌾𑌚𑌮𑌿𑌮𑌾𑌂 𑌪𑍍𑌰𑌸𑍁𑌪𑍍𑌤𑌾𑌂
𑌸𑌂𑌜𑍀𑌵𑌯𑌤𑍍𑌯𑌖𑌿𑌲𑌶𑌕𑍍𑌤𑌿𑌧𑌰𑌃 𑌸𑍍𑌵𑌧𑌾𑌮𑍍𑌨𑌾 ।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌂𑌶𑍍𑌚 𑌹𑌸𑍍𑌤𑌚𑌰𑌣𑌶𑍍𑌰𑌵𑌣𑌤𑍍𑌵𑌗𑌾𑌦𑍀𑌨𑍍
𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌨𑍍𑌨𑌮𑍋 𑌭𑌗𑌵𑌤𑍇 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌯 𑌤𑍁𑌭𑍍𑌯𑌮𑍍 ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீமதுராந்தகம் பாடசாலை

ஸ்ரீ மதுராந்தகம் பாடஶாலையில், நிகழும் ஆனிமீ 22உ (6—7—47) ஞாயிற்றுக்கிழமை தினம் சென்ற கோடை விராமம் முடிந்து புதிய வர்ஷத்து ப்ரவசநம் ஆரம்பிக்கப்பட்டது. புதிய வர்ஷத்திற்காக வித்யார்த்திகள் ஆனிமீ 29உ (13-7-47) ஞாயிற்றுக் கிழமை யன்று சேர்க்கப்பட்டார்கள். அப்படிச்சேர்வதற்காக மனுச் செய்துகொண்டிருந்த வித்யார்த்திகளுள் பலர் அன்று பகல் 12-மணிக்குப் பாடசாலையில் ஸந்நிஹிதர்களாக இருந்தார்கள். ஸ்ரீ ஸந்நிதியிலிருந்து ஸ்ரீ கார்யம் ஸ்வாமியும் எழுந்தருளியிருந்தார். பழைய வித்யார்த்திகள் 77-க்குமேல் 10 பெயர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

* * * * *

ஸ்ரீ அழகியசிங்கரின் சார்துமாஸ்ய ஸங்கல்பம்

ஆனிமீ 19உ (3—7—47) வியாழக்கிழமை யன்று நமது மடம் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ ஸ்வாமி ஸந்நிதியில் 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரோபயவேதாந்தாசார்ய ஸ்ரீ பகவத்ராமாநுஜஸித்தாந்தநிர்த்தாரணஸார்வபௌம ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீ வண்சடகோப ஸ்ரீ ஸ்ரீரங்க ஶடகோப யதீந்த்ர மஹா தேசிகனுடைய சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவம் திருவெவ்வுளூரில் நடை பெற்றது. அப்பொழுது அநேக வைதிக வித்வான்களும் அநேக லௌகிக ப்ரபுக்களும் ஸந்நிஹிதர்களாயிருந்து ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனை ஸேவித்து, ஸ்ரீ அழகிய சிங்கரின் அநுக்ரஹத்தையும் பல மந்த்ராக்ஷதைகளையும் பெற்றுக்கொண்டு, பரமாநந்தத்துடன் தங்கள் தங்கள் க்ருஹத்துக்கு எழுந்தருளினார்கள். நம்முடைய ஸித்தாந்தத்தை ஓங்கி வளரும்படி செய்வதையே ஏக தீக்ஷையாகக் கொண்டு, அதை ஸாதித்துக் கொள்வதற்குப் பஹுவித ப்ரயத்நத்தைச் செய்துவரும் ஸ்ரீ அழகியசிங்கர், பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருக்கவேண்டு மென்

றும், அந்த ப்ரயத்நங்க ளெல்லாம் பூர்ண பல ப்ரதங்களாகி ஸ்ரீ ராமாநுஜனுடைய ஸித்தாந்தம் ' வயஉதாஉஸிவயஉதாழ ' என்கிறபடி மேன்மேல் தழைத்து வரும் படி ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் கடாக்ஷித்தருளவேண்டு மென்றும் நாம் ஹார்த்த மாக ப்ரார்த்திக்கிறோம்.

* * * * *

ஆலயங்களில் ஹரிஜந ப்ரவேசம் பூர்ணமாக நடைபெற்று விட்டது. ப்ராயேண ஜாதி பேதமும் ஒழிந்தது. ஆசாரங்களிலும் ஆஹாராதிகளிலும் இவ்வளவு காலமாக இருந்த நியமங்க ளெல்லாம் தொலைந்து விட்டன. இனி எல்லோரும் காம சாரர்களாக வும் காம பக்ஷர்களாகவும் வர்த்திக்கலாம். இதைத் தான் நமது சீர்திருத்தக்காரர்கள் பஹு காலமாக ப்ரார்த்தித்து வந்தார்கள். அவர்களுடைய மனோரதம் நிறைவேறிவிட்டது. ஸ்வர்க்க ப்ராப்தி பெற்றதுபோல அவர் கள் குதூஹலிகளாக ஸஞ்சரிக்கிறார்கள். சாஸ்த்ரத்தை நம்பி நடந்த வர் வருந்துகிறார்கள். அர்ச்சையில் தைவ ஸாந்நித்ய மிருக்கிற தென்று சாஸ்த் ரம் சொல்வதை நம்பி, அதை ஸேவித்துப் பூஜித்து ஆராதித்து வந்த ஆஸ்திக ஜநங்கள் சொத்தைப் பறி கொடுத்த பாக்யஹீநர்கள் போல எங்கும் நிர்வேதத் துடன் தபித்து வருவதை நாம் அறிவோம். இதுவும் பகவத் ஸங்கல்பமே. நம் முடைய அநுபவம் முழுவதும் ஜந்மாந்தர கர்மங்களின் பலமன்றோ? அந்தக் கர்மங்களுக்கு அநுகுணமாக ஜகத் வ்யாபாரத்தை நிர்வஹித்து வரும் பரமாத்மா அவரவர்களுக்குத் தக்கபடி பலங்களைக் கொடுக்கிறார். ஆகையால் நமது துஷ்கர்மங்களை நினைத்து நாம் வருந்தவேண்டுமே யொழிய, பிறர் மீது தோஷம் நினைப்பது சரியன்று.

ஸ்வராஜ்யத்தால் ஏற்பட்டுள்ள அநர்த்தம்

நமது ராஜாங்கத்தாரே மத விஷயங்களில் ஆக்ரமிக்க ப்ரயத்நப்பட்டு விட்டார்களேயானால் நாம் செய்யக்கூடியது என்ன இருக்கிறது? முன்காலத் தில் நமது தேசம் மதாந்தரஸ்தர்களால் ஆக்ரமிக்கப்பட்டிருந்த காலத்தில் நமது தேசத்து ஜநங்களைத் தமது மதத்தைத் தழுவவேண்டு மென்று அவர்கள் நிர்ப்பந் தப்படுத்தினார்க ளென்றும், அந்த நிர்ப்பந்தத்துக்கு இணங்காதவர்களைக் கொன் றார்க ளென்றும் பெரியோர் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்பொழுது இவர்கள் சட்டமூலமாகச் செய்யும் நிர்ப்பந்தத்திற்கும், அவர்கள் சட்டத்தை மீறிச் செய்த நிர்ப்பந்தத்திற்கும் விசேஷ மென்ன வென்பது நமக்குப் புலப்பட வில்லை. இரண்டு இடங்களிலும் பலிஷ்டர்கள் துர்ப்பலர்களை ஹிம்ஸிப்ப தென்னும் தோஷம் இருப்பதைக் காணலாம். மத விஷயத்தில் நிர்ப்பந்திப்பது மஹா பாப மென்று பெரியோர் கூறுவார்கள். லோகத்தில் ஜநங்கள் தம் தம் வாஸனைக்கு அநுரூபமாயிருக்கும் ஜ்ஞாநத்துக்குத் தக்கவாறு தத்தமக்குத் தைவ மென்று தோன்றுவதைத் தொழுது வருகிறார்கள். ஸகல வஸ்துக்களிலு மிருக் கும் பகவான், அப்படி அவர்கள் செய்யும் பூஜையைத் தனக்குச் செய்ததாகத் திருவுள்ளம் பற்றி, அந்தந்தத் தைவத்தில் இருக்கும் அவரவர்களுடைய ச்ரத் தையை நிர்விக்நமாக வளரும்படி செய்கிறான். இந்த ஜ்ஞாநம் அவர்களுக்கு

இல்லாவிடினும், உண்மையாக அது பகவதாராதந மாகிறபடியால், பரமாத்மா அவரவர்களுடைய இஷ்டத்தை அந்தந்தத் தைவத்தின் த்வாரா, அது அல்பமாக இருந்த போதிலும், நிறைவேற்றுகிருன். கால க்ரமேண அவர்களுக்கு உண்மையான தத்வ ஜ்ஞாநம் ஜநித்து, அவர்களும் நல்ல கதியை அடைகிருர்களென்று ஸ்ரீ கீதாசார்யன் ஸ்வயமே வெளியிட்டிருக்கிருன்.

“ 𑌯𑍋 𑌯𑍋 𑌯𑌾𑌂 𑌯𑌾𑌂 𑌤𑌨𑍁𑌂 𑌭𑌕𑍍𑌤𑌃 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾𑌰𑍍𑌚𑌿𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌤𑌿 ।
𑌤𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯𑌾𑌚𑌲𑌾𑌂 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌾𑌂 𑌤𑌾𑌮𑍇𑌵, 𑌵𑌿𑌦𑌧𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍
𑌸 𑌤𑌯𑌾 𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌯𑌾 𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌰𑌾𑌧𑌨𑌮𑍀𑌹𑌤𑍇 ।
𑌲𑌭𑌤𑍇 𑌚 𑌤𑌤𑌃 𑌕𑌾𑌮𑌾𑌨𑍍 𑌮𑌯𑍈𑌵 𑌵𑌿𑌹𑌿𑌤𑌾𑌨𑍍𑌹𑌿 𑌤𑌾𑌨𑍍 ॥ ”

ஶாண்டில்ய ஸம்ஹிதையிலும், இப்படி அல்ப பலத்தை உத்தேசித்து, சரியான ஜ்ஞாந மின்றிக்கே ஒன்றைத் தைவமென்று நினைத்துத் தொழுகிறவர்களும், கடைசியில் பரமபுருஷார்த்தமான மோக்ஷத்தை அடைகிருர்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

“ 𑌭𑌗𑌵𑌨𑍍𑌤𑌂 𑌸𑌮𑍁𑌦𑍍𑌦𑌿𑌶𑍍𑌯 𑌤𑌦𑍇𑌕𑌶𑌰𑌣𑌾 𑌨𑌰𑌾𑌃 ;
[illegible] ॥ ,’

பகவத் க்ருபை இவ்விதம் அநாலோசித விஶேஷமாக ப்ரவஹிக்கிறபடியால், ஒருவரை ஒருவர் நிஹீநராக நினைக்கவாவது, ஒருவரை ஒருவர் தமக்குச் சரியானதென்று தோன்றும் மார்க்கத்தில் வந்து சேரும்படி நிர்ப்பந்திக்கவாவது ப்ரயத்நப்படக்கூடாது. ஆங்கிலர்கள் ராஜ்ய பரிபாலநம் செய்துகொண்டு வந்தபொழுது, மதவிஷயத்தில் ப்ரவர்த்திக்கிறதில்லை யென்று, அவர்கள் ஒருவித வ்ரதத்தை வஹித்து வந்தார்கள். அந்தக் காலத்தில் ஶாஸ்த்ரத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டுமென்று எண்ணம் கொண்டிருக்கும் ஸாத்விகர்கள் எவ்வித கஷ்டத்தையும் அநுபவித்ததில்லை. இப்பொழுது ஸ்வராஜ்யம் வந்த பிறகே அவர்களுக்கு இவ்வித ச்ரமம் ஸம்பவித்திருக்கிறது. தைவமே ப்ரமாணம்.

*　　*　　*　　*

பகவத் விக்ரஹங்களின் ஆராத்யத்வம்

‘ஹரிஜநங்களென்று வ்யவஹரிக்கப்படும் பஞ்சம ஜாதீயர்களால் ப்ரவேஶிக்கப்பட்டுள்ள ஆலயங்களை நாம் பரித்யஜித்துவிட வேண்டுமா? இல்லாவிட்டால் நாம் யதாபூர்வம் போய்ப் பகவத் ஸேவாதிகளைச் செய்துவரலாமா?’ என்னும் ஸந்தேஹம் இப்பொழுது அநேக ஜநங்களைப் பாதித்து வருகின்றது. ப்ராயேண, பரிகணிதர்களான பண்டித ஆஸ்திகர்களெல்லாரும் ஆலயம் தொழுவதைக் கைவிட்டிருப்பதாகவே அறிகிறோம். ஆலயங்களில் பஹுகாலமாகச் சிற்சில கைங்கர்யத்தையும் சிற்சில பலங்களையும் உத்தேஶித்துப் போய்க் கொண்டிருப்பவர்களுள் சிலரும், இன்னும் சில ஸாமாந்ய ஜநங்களும், அதைக் கைவிடாமல் அநுஷ்டித்து வருகிறார்களாம். மற்றும் சிலர், ஆலயங்களிலுள்ள திவ்யமங்கள விக்ரஹத்தின் சிரகால பரிசயத்தாலோ, அதன் ஸேவையால்

தமக்கு வளர்ந்து வந்திருக்கும் பக்தி விசேஷத்தாலோ, அதில் ஜநித்துள்ள ப்ரீத்யாதிக்யத்தால் அதை விட்டுவிடுவதற்கு அசக்தர்களாயிருக்கிறார்கள்; ஆனாலும் வ்யபதிஷ்டர்களின் ஆசாரத்துக்குப் பயந்து அவர்கள் ஸங்கடப்பட்டுக்கொண்டு வருகிறார்க ளென்று தெரியவருகிறது. இந்தக் குழப்பத்தை ஒருவிதமாக நிர்ணயம் செய்யவேண்டியது அவச்யமென்று எண்ணி, நாம் அதைப்பற்றி இவ்விடத்தில் ப்ரஸதாவிக்கத் துணிகின்றோம்.

‘𑌨 𑌕𑌲𑌞𑍍𑌜𑌂 𑌭𑌕𑍍𑌷𑌯𑍇𑌤𑍍’ [களஞ்ஜத்தைப் புஜிக்காதே] என்று சில கர்மங்களை சாஸ்த்ரங்கள் நிஷேதிக்கின்றன. அந்த விதியை மீறி நாம் அவைகளில் ப்ரவர்த்தித்தால், அதனால் ப்ரத்யவாயம் நேரிடுமென்றும் சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. அம்மாதிரியான கர்மங்களை சாஸ்த்ரவச்யர்களான ஸாதுக்கள் விட்டு விடவேண்டியதுதான். சில கர்மங்களை சாஸ்த்ரங்கள் நிஷேதிக்கலாம்; ஆனால் அவைகளின் அநுஷ்டாநத்தால் ப்ரத்யவாயம் ஏற்படுகின்றதென்று சாஸ்த்ரங்களில் சொல்லப்படாமல் அவைகளின் அநுஷ்டாநத்தால் ஸித்தி ஒன்றுமில்லாமலிருக்குமென்று மாத்ரம் சொல்லப்பட்டிருக்கலாம். அப்படிப்பட்ட கர்மங்களையும் நாம் ஸர்வதா விட்டுவிட வேண்டியது தானா? இவைகளின் அநுஷ்டாநத்தால் தோஷமொன்றும் ஏற்படவில்லை யென்பது வஸ்துஸ்திதியானால், அவைகளைச் செய்ய வேண்டுமென்னும் உத்வேகத்தையுடையவன் ஏன் அவைகளைச் செய்யக்கூடாது? ப்ரக்ருதத்தில் அநாசாராதிகளால் தைவ ஸாந்நித்யத்தை இழந்து நிற்கும் அர்ச்சைகளை ஸேவிப்பது கீழ்ச் சொல்லப்பட்ட இரண்டுவித கர்மங்களுள் இரண்டாவது கோஷ்டியைச் சேர்ந்ததாக இருக்கும் பக்ஷத்தில், அதைக் கைவிட சக்தியற்றவர்கள் ஏன் அதைச் செய்யக்கூடாது? என்னும் கேள்வி எழுகின்றது. அப்ரதிஷ்டிதமான விக்ரஹங்களிலோ சித்ரங்களிலோ நாம் ஸேவாதிகளைச் செய்தால் அதற்குப் பலமில்லை யென்று மாத்ரம் சொல்லப்பட்டிருக்கிறதேயொழிய, அதைச் செய்தால் பாதித்யம் ஸம்பவிக்குமென்று சொல்லப்படவில்லையே! இதை ஏன் தடுக்கவேண்டும்? அநந்ய ப்ரயோஜநமாகக் கர்மங்களைச் செய்துவரும் பரமைகாந்திகளும், பலமில்லை யென்னும் காரணத்தால் மாத்ரம் ஒரு கர்மத்தை விலக்க ஹேதுவில்லையே! ஆகையால் ஏன் பரமைகாந்திகளும் இதை அநுஷ்டித்து வரக்கூடாது?

“𑌯𑌶𑍍𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌵𑌿𑌧𑌿𑌮𑍁𑌤𑍍𑌸𑍃𑌜𑍍𑌯 𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 𑌕𑌾𑌮𑌕𑌾𑌰𑌤𑌃 ।
𑌨 𑌸 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌮𑌵𑌾𑌪𑍍𑌨𑍋𑌤𑌿 𑌨 𑌸𑍁𑌖𑌂 𑌨 𑌪𑌰𑌾𑌂 𑌗𑌤𑌿𑌮𑍍 ॥”

என்பதும், ‘𑌕𑌾𑌮𑌕𑌾𑌰𑌤𑌃’ என்று அவ்விடத்திற் சொல்லப்பட்டிருக்கிறபடியால், காம க்ரோதாதிகளால் ஏவப்பட்டு ஸ்வச்சந்தமாக நடக்குமவர்களைப் பற்றியதன்றோ? ப்ரக்ருதத்தில் அம்மாதிரியான காமம் முதலியவை ப்ரேரகங்க ளல்ல. முக்தர்களின் அநுபவம் போல் கேவலம் அவைகளின் அநுஷ்டாநத்தால் ஜநிக்கும் ஆநந்தமே ப்ரேரகமன்றோ? அந்த ஆநந்தத்துக்குக் குறையில்லையே. இவ்வாறு எழும் ஸந்தேஹத்துக்கு இதைப் பரித்யஜித்திருக்கும் ஆஸ்திகர்கள் என்ன ஸமாதாநம் சொல்லுகிறார்க ளென்பது தெரியவேண்டும்.

ஶாஸ்த்ரஜ்ஞர்கள் பின் வருமாறு ஒரு ஸமாதானம் சொல்லக் கூடும். ஒரு கர்மம் தோஷ துஷ்டமாயிருப்பதும் அது அப்படி இராம லிருப்பதும், கேவலம் அதைச் செய்வதால் ப்ரத்யவாய முண்டு என்னும் வாக்யம் காணப் படுவதாலும் அது காணப்படாததாலும் என்பது இல்லை; பகவதநுஶாஸ மாகிற ஶாஸ்த்ரத்துக்கு விபரீதமாக இருப்பதே அதற்குக் காரணம். அநாசார ஸம்பந்தம் பெற்ற அர்ச்சையை ஸேவிப்பது பகவதநுஶாஸநத்துக்கு விபரீதம்; ஆகையால் அது துஷ்டமே என்பது தான்.

“[illegible]” [ப. கீ. பாஷ்யம் 17—5]

[பகவதாஜ்ஞைக்கு விபரீதமாயிருப்பதாவது, அஶாஸ்த்ர விஹிதமா யிருப்பது தான். செய்யப்படும் கார்யம் வைதிகமாக இருந்தாலும், தேஶம் காலம் த்ரவ்யம் முதலிய நியமங்களை அநாதரித்து அநுஷ்டிக்கப்படுமதே அஶாஸ்த்ர விஹிதம் என்பதன் கருத்து.] கர்மங்களை நிஷ்பலமாகச செய்வதுடன் நிற்காமல் அநர்த்தத்திலும் பர்யவஸிக்கும் என்பது ஶ்ரீ கீதா பாஷ்யகாரருடைய அபிப்ராயம். பகவத் ஸாந்நித்ய மிராத விக்ரஹத்தை ஆராதிப்பது, மநோபாவம் சுத்தமாக இருந்தாலும், பகவதநுஶாஸநத்துக்கு விபரீதமாக இருப்பதால், அது நிஷ்பலமாக முடியு மென்பது மாத்ர மின்றிக்கே அநர்த்தத்திலும் முடியுமாகையால் அது பரித்யஜிக்கத் தகுந்ததே. இதுதான் ஶாஸ்த்ரஜ்ஞர்களுடைய ஸமாதானமாக இருக்கவேண்டு மென்பது நமது எண்ணம்.

ஸ்வஸ்தாநேஷு—யோகத்தில் ஒரு க்ரம முண்டு. முதலில் ப்ராணபாநாதி வாயுக்களை ப்ராணாயாமாதிகளால் அடக்குவதும், பிறகு மற்ற இந்த்ரியங்களை அவ்வவற் றிற்குச் சொந்தமான விஷயங்களிற் செல்லாமல் தடுப்பதும், பிறகு மநஸ்ஸை ஸ்திரப் படுத்திக் கொள்வதும், பிறகு ஆத்மாவலோகநத்தில் ப்ரவர்த்திப்பதுமே அந்த க்ரமம். அந்த க்ரமத்தைத் தான் யமம் நியமம் ப்ரத்யாஹாரம் முதலிய பதங்களால் யோக ஶாஸ் த்ரம் பேசுகின்றது. ஆத்ம ஸாக்ஷாத்கார மென்பது ஸுலபமான வ்யாபார மன்று. மநஸ் ஸ்வாதீந மாகாவிட்டால் ஆத்ம த்யாநம் ஸாத்ய மில்லை. மநஸ் ஸ்வாதீநமாவதற்கு இந்த்ரியங்கள் அடக்கப்படவேண்டும். இந்த்ரியங்களை அடக்குவதற்கு ப்ராணா யாமம் உபகாரகம் ஸ்ரீ பகவான் யோகேச்வர னானதால், அவன் ஸ்வாநுஷ்டாநத்தால் இந்த யோகத்தைத் தன்னை ஆச்ரயித்தவர்களுக்கு உபதேசிக்கிறானே யென்று உத்ப்ரே க்ஷிக்கிறார். அது உபபந்நமே.

இவ்விடத்தில் இந்த யோகோபதேஶத்திற்கு ப்ரஸ்தாவ மென்ன வென்றால்: ஹிரண்யாஸுரனை வதம் செய்யும் வ்யாபாரத்திற்கும் யோகாநுஷ்டாநத்திற்கும் பொதுவாகச் சில அம்ஶங்கள் தென்படுகின்றன என்பது தான். இந்த ஸாதர்ம்யம் சில விடங்களில் கேவலம் ஶப்தத்தில் மாத்ரம் தென்படும்; மற்றும் சில விடங்களில் அர்த்தத்திலும் ஸம்பந்தப்பட்டு நிற்கும். இவ்விடத்தில் அது ஶப்த மாத்ரத்தில் தெரிகின் றது. மருத்கண நியமநம், யோகம் செய்பவனுக்கும் ந்ருஸிம்ஹாவதாரத்துக்கும் பொது. ஆனால் ஶப்தத்தில் மாத்ரம் பொது; அர்த்தம் பேதித்தே யிருக்கின்றது. போகபர மாகும் போது 'மருத்' என்பதற்கு 'வாயு' என்பது பொருள்; ப்ராணாயாமாதிகளால் வாயுவை அடக்குவ தென்பது தேர்ந்த பொருள். ஹிரண்ய வத பரமாகும்போது 'மருத்' என்பதற்குத் 'தேவதைகள்' என்பது பொருளாகும். ஹிரண்யனிட மிருந்து பயந்து ஓடின தேவர்களைத் திருப்பி அவரவர்களுடைய ஸ்தாநத்தில் ஸ்தாபிப்ப தென்பது தாத்பர்யம்.

ஸ்வாதீந—இந்த்ரியங்கள் ஸ்வாதீநமாக இருப்பதும் இரண்டு இடங்களிலும் அந்வயிக்கும். யோகிகளுக்கு இந்த்ரிய ஜயம் அவச்யம் வேண்டும். ஸகல சேதநாசேதந வஸ்துக்களின் ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்திகளைத் தனது அதீநத்தில் வைத்துக்கொண்டும், 'ஹ்ருஷீகேஶ:' [இந்த்ரியங்களுக்கு ஈசன்] என்னும் பெயரைப் பெற்றுக்கொண்டு மிருக்கும் ஈச்வரனுக்கு இந்த்ரியங்கள் ஸ்வாதீநங்க ளென்று சொல்லவும் வேண்டுமோ? ஆனால், இவ்வாறு ஸ்வாதீந ஸர்வேந்த்ரியனாகை இருப்ப தென்பது பகவானுக்கு ஸ்வயமே உண்டு. ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதாரத்துக்கு மாத்ரம் அந்வயிக்கும் ஒரு அஸாதாரண தர்மமே இவ்விடத்தில் குறிக்கப்படவேண்டுவ திருக்க, இப்படி, ஈச்வரனுக்கு ஸ்வதஸ்ஸித்தமான ஒரு தர்மத்தை ப்ரஸ்தாவித்து, அதனால் ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதாரம் செய்த பகவானுக்கும் யோகிகளுக்கும் ஒரு ஸாதர்மயத்தை ஸாதிப்பது கொஞ்சம் ஆலோசிக்கத் தகுந்ததாகவே இருக்கிறது.

ஸ்திரதாரணா—யோகத்தின் க்ரமத்தில் யம நியமாதிகளுக்கு மேற்பட்டதாக 'தாரணை' என்று சொல்லப்படும் ஒரு அவஸ்தை உண்டு. அது ஆத்மாவலோகநத்திற்குப் பூர்வ பாவியானது. அப்பொழுது மநஸ் நிவாதஸ்த தீபம் போல நிச்சலமாக இருக்கும். இம் மாதிரி யோகாவஸ்தைகளுக்குச் சிற்சில ஆஸநங்கள் உபகாரகங்க ளென்று ஶாஸ்த்ரத் திற் சொல்லப்பட்டிருக்கிறது. 'தாரணா' என்னும் இந்தத் தஶைக்குப் 'பர்யங்க பந்தம்' என்றொரு ஆஸந விஶேஷம் உண்டாம். அது இவ்விடத்தில் ப்ரஸ்தாவிக்கப் படுகின்றது. அந்த ஆஸநம் எவ்வித லக்ஷணமுடைய தென்பதை ஶாஸ்த்ரத்திலிருந்தே

𑌵𑌿𑌕𑌸𑍍𑌵𑌰𑌨𑌖𑌸𑍍𑌵𑌰𑍁𑌕𑍍𑌷𑌤𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌵𑌕𑍍𑌷𑌸𑍍𑌸𑍍𑌥𑌲𑍀
𑌨𑌿𑌰𑌰𑍍𑌗𑌲𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌗𑌲𑌦𑍍𑌰𑍁𑌧𑌿𑌰𑌸𑌿𑌨𑍍𑌧𑍁𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌯𑌿𑌤𑌾𑌃 ।
𑌅𑌵𑌨𑍍𑌤𑍁 𑌮𑌦𑌨𑌾𑌸𑌿𑌕𑌾𑌮𑌨𑍁𑌜𑌪𑌞𑍍𑌚𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌮𑌾
𑌮𑌹𑌂𑌪𑍍𑌰𑌥𑌮𑌿𑌕𑌾𑌮𑌿𑌥𑌃𑌪𑍍𑌰𑌕𑌟𑌿𑌤𑌾𑌹𑌵𑌾 𑌬𑌾𑌹𑌵𑌃 ॥ 6 ॥

அறிந்துகொள்ளவேண்டும். மேற்கு முகமாக வீற்றிருப்பது ஒரு லக்ஷணமென்று தெரிகிறது. [𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌙𑍍𑌮𑍁𑌖𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃] '𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍' என்பதற்கு 'ஆத்மவஸ்து' என்று பொருளு முண்டு. யோகிகள் ஆத்மாபிமுகமான மநஸ்ஸை உடைத்தாயிருக்கிறார்களென்பதும், ஸ்ரீ ந்ருஸிம்ஹன் ஹிரண்யவத காலத்தில் பச்சிமாபிமுகனாக இருந்தானென்பதும் இவ்விடத்தில் விவக்ஷிதங்கள். அது காரணமாக இரண்டுக்கும் ஸாதர்ம்யம்.

𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣—ஹிரண்யவதம் செய்யும் ந்ருஸிம்ஹனைப் பார்த்தால், 'யோகம் உபதேசம் செய்கிறாரோ இவர்?' என்று நினைக்கும்படி இருக்கிற தென்று ஸ்வாமி உத்ப்ரேக்ஷிக்கிறார்.

𑌅𑌶𑍇𑌷𑌜𑌗𑌤𑌾𑌂 𑌫𑌲𑌾𑌨𑌿 𑌤𑌨𑍋𑌤𑍁—ஆச்ரிதர்களுக்கு அவன் ஸர்வ பல ப்ரதன். 'ஸகல பலங்களும் அவனிட மிருந்தே ப்ரவஹிக்கிறபடியால், அவனை நாம் ஆச்ரயிப்போம்' என்பது தாத்பர்யம். அப்படி ஆச்ரிதர்களுக்கு எல்லாப் பலங்களையும் கொடுத்து, அதனால், 'இவன் புருஷார்த்தங்களைக் கொடுக்கிறவன்' என்னும் ஒரு ப்ரக்யாதி வரவேண்டு மென்று ஒரு ஆசம்ஸை அவனுக் கிருக்கிற தென்பதும் இதனால் த்யோதிக்கப்படுகிற தென்று சிலர் வ்யாக்யாநிப்பார்கள். '𑌉𑌦𑌾𑌰𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵 𑌏𑌵𑍈𑌤𑍇' என்று தனக்குப் புருஷார்த்த ப்ரதத்வத்தை ஸம்பாதித்துக் கொடுக்கும் ஆச்ரிதர்களை, 'அவர்கள் உதாரர்கள்' என்று கொண்டாடினவ னன்றோ இவன்? ஆகையால் அந்த அர்த்தமும் இவனுக்குப் பொருந்தும். ஆனால் இவ்விடத்திலிருக்கும் பதங்கள் அந்த அர்த்தத்திற்கு இடங்கொடுக்கின்றனவா என்பது சிந்த்யம். ஒரு கால் '𑌕𑌾𑌮𑌾𑌸𑌿𑌕𑌾𑌕𑍇𑌸𑌰𑍀' [காமாஸிகையில் வஸிக்கிறவன்] என்னும் பதத்தின் ஸ்வாரஸ்யம் இந்த அர்த்தத்திற்கு இடங்கொடுக்கின்ற தென்று சொல்லலாம்.

6. இப்படி இஷ்ட ப்ராப்தியை ப்ரார்த்தித்துவிட்டு, இப்பொழுது அநிஷ்ட நிவ்ருத்தியை ப்ரார்த்திக்கிறார் 'அவனுடைய கைகள் அநிஷ்டங்களிலிருந்து என்னைக் காப்பாற்றட்டும்' என்பது ப்ரார்த்தநை. '𑌬𑌾𑌹𑌵𑍋 𑌰𑌾𑌮𑌸𑍍𑌯 𑌸𑌂𑌶𑍍𑌰𑌿𑌤𑌾' என்று, அவனுடைய கைகள் ரக்ஷகங்களாகப் பல விடங்களில் பேசப்பட்டிருக்கின்றன. இவ்விடத்தில் ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதாரத்தின் கைகளுக்குள்ள ஏற்றத்தைப் பெரியதொரு விசேஷணத்தால் ஸ்வாமி விளக்குகிறார். அந்த விசேஷணத்தின் சொற் பொலிவும் அர்த்த காம்பீர்யமும் மிகவும் போற்றத் தகுந்தவை.

[ப—ரை] 𑌵𑌿𑌕𑌸𑍍𑌵𑌰—ப்ரகாசித்துக்கொண்டிருக்கிற, 𑌨𑌖—நகங்களாகிற, 𑌸𑍍𑌵𑌰𑍁—வஜ்ராயுதத்தால், 𑌕𑍍𑌷𑌤—பிளக்கப்பட்ட, 𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌵𑌕𑍍𑌷𑌸𑍍𑌸𑍍𑌥𑌲𑍀—ஹிரண்யாஸுரனுடைய மார்பிலிருந்து, 𑌨𑌿𑌰𑌰𑍍𑌗𑌲—தடையின்றிக்கே. 𑌵𑌿𑌨𑌿𑌰𑍍𑌗𑌲𑌤𑍍—ப்ரவஹித்துவரும், 𑌰𑍁𑌧𑌿𑌰𑌸𑌿𑌨𑍍𑌧𑍁—ரக்த நதிகளால், 𑌸𑌨𑍍𑌧𑍍𑌯𑌾𑌯𑌿𑌤𑌾𑌃—ஸந்த்யா காலம் போல் செய்யப்பட்டிருக்கிறவும், [ரக்தத்தால் சிவந்திருக்கிற,]

ஸடாபடலபீஷணே ஸரபஸாட்டஹாஸோத்படே
ஸ்புரத்க்ருதி பரிஸ்புடத்ப்ருகுடிகேபி வக்த்ரே க்ருதே ।
க்ருபாகபடகேஸரிந்! தநுஜடிம்பதத்தஸ்தநா
ஸரோஜஸத்ருஶா த்ருஶா வ்யதிவிஷஜ்ய தே வ்யஜ்யதே ॥ 7 ॥

அஹம்ப்ரதமிகாமித: ப்ரகடிதாஹவா:—'நான் முன்னே நான் முன்னே' என்று பரஸ்பரம் போட்டி போட்டுக் கொண்டு அதனால் வெளியிடப்பட்டிருக்கிற யுத்த உத்ஸாஹத்தை உடையவையாகவு மிருக்கிற, மதநாஸிகாமநுஜபஞ்சவக்த்ரஸ்ய பாஹவ:—மதநாஸிகையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கைகள், மாம்—என்னை, அவந்து—ரக்ஷிக்கட்டும்.

விகஸ்வர—ஒரு வஸ்து மற்றென்றுக்கு ரக்ஷகமாக இருப்பதற்கு, ஸ்வயம் பராக்ரமத்தை உடையதாகவும், தீரமாகவும் ரக்ஷண வ்யாபாரத்தில் ச்ரத்தை உடையதாகவும் இருத்தல் வேண்டுமன்றோ! இந்தக் கைகளுக்கு அவ்விதமான ஏற்ற மிருக்கிற தென்பதை 'விகஸ்வர' இத்யாதியான விசேஷணம் விளக்குகின்றது. ஹிரண்யாஸுரனுடைய மார்பு, பர்வதம் போன்ற அதிகடிநமான வஸ்து. அதைப் பிளப்பதற்கு ஒருவித ஆயுதத்தையும் அபேக்ஷியாமல் நகங்களைக் கொண்டே அதைக் கிழித் தெறிந்தா னென்றால், அந்த நகங்களுடைய காடிந்யத்தையும் கைகளின் பலத்தையும் பற்றி என் சொல்வது? ஹிரண்யாஸுரனை வதம் செய்வதற்காகப் பகவான் புறப்படுகையில், அவன் ஒருவித ஆயுதமு மின்றிக்கே புறப்படுவதைப் பார்த்து, சங்கம் சக்ரம் முதலானவைகளெல்லாம் அஸ்தாந பய சங்கிகளாய்த் தாமும் கூடவருவதாக விண்ணப்பித்துக் கொள்ள, 'நீங்கள் ஒருவரும் வேண்டாம்' என்று ஸ்ரீ பகவான் தடுத்துவிட்டுப் புறப்பட்டார் என்னும் அர்த்தம் தோன்றும்படி, ஸ்ரீ தேசிகன் தஶாவதார ஸ்தோத்ரத்தில்,

" ப்ரத்யாதிஷ்டபுராதநப்ரஹரணக்ராம: "

[நிராகரிக்கப் பட்ட பழைய ஆயுதக் கூட்டங்களை உடையவனாய்] என்று பத ப்ரயோகம் செய்தருளியிருக்கிறார். 'ப்ரத்யாதிஷ்ட' [தடுக்கப்பட்ட] என்னும் பதத்தின் ஸ்வாரஸ்யம் இது.

அஹம் ப்ரதமிகா—கைகளெல்லாம் 'நான் முன்னே' 'நான் முன்னே' என்று போட்டி போட்டுக் கொண்டனவாம். 'கைகள் அசேதநங்க ளல்லவா? அவை எவ்விதம் போட்டி போடக் கூடும்?' என்றால், அவனுடைய ஆயுதங்கள் எல்லாவற்றுக்கும் சைதந்ய முண்டு என்று சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனுடைய வில்லைப் பற்றிப் பேசுங்கால், ஸ்ரீ வால்மீகி, அதைச் சேதந வஸ்துவாகவே பாவித்துப் பேசுகிறார். சத்ருக்களுடைய தர்ஶந மாத்ரத்தில் அவனுடைய தநுஸ் துடித்துக் கொண்டு கிளம்பிற் றென்றும், அதை அவன் அடக்கிக்கொண்டா னென்றும் அர்த்தமாகும்படி 'ஸஞ்ஜஹ்ரே தநு:' [வில்லை அடக்கிக் கொண்டு] என்று பத ப்ரயோகம் செய்திருப்பதைப் பார்க்கலாம். அந்தக் கைகள் சத்ருவினிடமிருந்து வரும் பயத்தை மாத்ரம் நிவ்ருத்தி செய்யு மென்பதில்லை; அவனிடமிருந்தே பயம் ஏதேனும் நேரும் போலிருந்தால் அதையும் நிவர்த்தித்துவிடும் என்றும் த்வநிக்கிறது. பகவான் சீற்றங் கொண்டால், அந்தச் சீற்றத்திலிருந்து காப்பாற்றும் யோக்யதையுள்ள பிராட்டியைப் போல ['உதிதோ ஹ்யாகுல: பரித்ராதுமுத்ஸஹா'] அவனுடைய அங்கங்களும் விசேஷ சக்தி வாய்ந்தவைகளே.

[library stamp]

7. கீழே 'ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கைகள் நம்மை ரக்ஷிக்கட்டும்' என்னும் ரக்ஷாபேக்ஷை வெளியிடப்பட்டது. இப்பொழுது, அப்படி அவன் ரக்ஷிக்கும் ஸ்வபாவமுள்ளவன் என்பது வெளியிடப்படுகின்றது. அவன் ப்ரதிகூலர்களுக்குப் பயங்கரமாயிருப்பனே யன்றி, அநுகூலர்களுக்கு அப்படி இரான். அவன் அநுகூலர்களைக் குளிர்ந்த கண்களால் கடாக்ஷித்து அவர்களை அநுக்ரஹிக்கும் சீலமுடையவனுகையால், அவனிடத்தில் ரக்ஷாபேக்ஷை பெறுவதைப் பற்றிச் சங்கிக்க வேண்டாம் என்பது தாத்பர்யம். கீழே இரண்டாவது ச்லோகத்தில் அநுக்ரஹித்திருக்கும் ப்ரகாரம், இவனுடைய கண்கள் விரோதிப்பார்க்கு ஸூர்யன் அக்நி போல் தாபகரமாக இருக்கச் செய்தேயும், ஆச்ரிதர்களுக்குத் தண்ணளி தோற்றச் சந்த்ரன் போல் ஆஹ்லாதகரனுக இருக்கும் வைசித்ர்யம் இவனிடம் உண்டென்பது இவ்விடத்தில் சொல்லப்படுகிறது.

[ப—ரை] கவடகெஸரிநு—கபடமாக ந்ருஸிம்ஹாவதாரம் செய்தவனே! வக்த்ரெ—முகமானது, ஸடாவடாஹீஷணெ—பிடரிமயிர்களின் கூட்டத்தால் பயங்கரமாயும், ஸஹஸாட்டஹாஸொஜ்ஜ்டெ—வேகமாக வெளிவரும் அட்டஹாஸமென்று சொல்லப்படும் இடி போன்ற சிரிப்பால் உக்ரமாயும், ஸ்பஷ்ட்டாயி—வெளியில் வ்யக்தமாகத் தெரியும் கோபத்தை உடையதாயும், வலிஸ்ஸட்ஹ்ரூ கூடிகெ—துடிக்கும் புருவங்களை உடையதாயும், கூதெசவி—[இவ்வாறு] செய்யப்பட்டிருந்தபோதிலும், தெ—உன்னுடைய, உயா—கருணையானது, உநூஜ ஸிம்ஹஉத்த்ஸநா[ஸதீ]—அஸுரக் குழந்தையான ப்ரஹ்லாதனுக்கு ஸ்தந்யம் கொடுக்கிறவளாய்க் கொண்டு [அதாவது: ஸந்தோஷகரமும் போஷகமுமான வ்யாபாரங்களைச் செய்துகொண்டு], ஸரொஜஸஉரஸா—தாமரைப் புஷ்பம் போன்ற, உரஸா—கண்ணுல், வூதிஹிஷஜூ—விசித்ரமான சிகித்ஸை செய்துகொண்டிருப்பதாய், வூஜூதெ—காணப்படுகிறது.

ஸடாவடாஹீஷணெ—சில ம்ருக விசேஷங்களுக்கு முக பாகத்தைச் சூழ்ந்து மயிர்கள் கூட்டம் கூட்டமாக வளர்ந்திருக்கும்; அவைகளை 'ஸடை' என்றும் 'கேஸரம்' என்றும் சொல்வார்கள். கோபம் வரும் காலங்களில் அந்த மயிர்கள் சிலிர்க்கும். அப்பொழுது அவை ஊர்த்வாக்ரங்களாக முள் போல நிற்கும். அவைகளைப் பார்த்தாலே பயம் ஜநிக்கும். ஸிம்ஹத்திற்கு அம்மாதிரி மயிர்கள் ஏராளமாக உண்டு. அந்தக் காரணத்தால் ஸிம்ஹத்திற்குக் 'கேஸரீ' என்னும் பெயர் வழங்குகின்றது.

கட்டஹாஸ:—இடி இடிப்பதற்குத் துல்யமான உச்சதர சப்தத்துடன் மேன் மேல் பொங்கி வரும் சிரிப்பை அட்டஹாஸமென்று சொல்வார்கள். அது மிகவும் க்ரூரமாகவே தென்படும்.

வலிஸ்ஸட்ஹ்ரூகூடிகெ—கோப காலத்தில் புருவம் நெறிக்குமன்றோ? அந்த நெறிப்பு உக்ரமான கோப காலங்களில் மிகவும் பயங்கரமாக இருக்கும்.

18926

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் '47 ஆ மே மாஸத்துச் சந்தா வரவு

				ரூ.
34	ஸ்ரீ.	A. ஸ்ரீநிவாஸராகவ ஐயங்கார், ஸ்ரீரங்கம்	....	3
71	,,	S. ஸௌந்தரராஜ ஐயங்கார், புதூர், திருச்சி	....	3
108	,,	S. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மயிலாப்பூர்	....	3
144	,,	R. ஸ்ரீநிவாஸ ஐயங்கார், ஸ்ரீரங்கம்	....	3
158	,,	V. R. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், காட்டாம்பட்டி	....	3
225	,,	A. மாதவ ஐயங்கார், பஸவங்குடி, பெங்களூர்	....	3
252	,,	K. லக்ஷ்மிநரஸிம்ஹ ஐயங்கார், கோவில்வெண்ணி	....	3
294	,,	I. ஸ்ரீநிவாஸாசாரியர், சைதாப்பேட்டை	....	1
539	,,	S. ஸம்பத் நாராயணன், ஜி. டி., சென்னை	....	3
586	,,	T. N. க்ருஷ்ணமாசாரியர், ரெய்ச்சூர்	....	3
607	,,	பூவராஹஸ்வாமி ஐயங்கார், பாரிக்கால், விழுப்புரம்	....	1
683	,,	R. கமலம்மாள், தாமல்	....	3
717	,,	S. S. கைலாஸம், கள்ளிக்கோட்டை	...	3
775	,,	P. R. கோபாலஸ்வாமி ஐயங்கார், புலியூர், கரூர்	...	3
776	,,	S. விஜயஸாரதி, புடுகபல்லி ...	....	3
			ஆக மொத்தம் ரூ.	41

'47-ஜூன் மாஸத்துச் சந்தா வரவு

3	ஸ்ரீ.	M. ஸ்ரீநிவாஸாசார்யர், மயிலாப்பூர்	...	3	
13	,,	S. சார்ங்கபாணி ஐயங்கார், மதுங்கா, பம்பாய்	...	3	
99	,,	R. ஸந்தானம் ஐயங்கார், தி. நகர்	....	3	
120	,,	S. செல்லம்மாள், தேனம்பேட்டை, சென்னை	....	3	
195	,,	R. ராமஸ்வாமி ஐயங்கார், ஊர்காம்	....	3	
205	,,	K. வெங்கடாசாரியர், சேலம்	....	3	
249	,,	L. C. ஸுந்தரவரதாசாரியர், சித்தூர்	....	3	
251	,,	N. க்ருஷ்ணஸாமி ஐயங்கார், கரூர்	....	3	
258	,,	A. க்ருஷ்ணராவ், செங்கல்பட்டு	....	3	
393	,,	திவான்பகதூர் S. ராகவையங்கார், ஸ்ரீரங்கம்	...	3	8
433	,,	K. சடகோபாசார்யர், நார்த் குஜராத்	....	3	
485	,,	T. D. ஐயங்கார், பெங்களூர்	....	3	
544	,,	R. ராமஸ்வாமி ஐயங்கார், மாதுங்கா, பம்பாய்	...	3	
623	,,	சேட்லூர் N. R. ராஜகோபாலாசார்யர். பவானி	...	3	
634	,,	T. வேதாந்தாசார்யர், மயிலாப்பூர்	...	3	
665	,,	மட்டப்ப கௌண்டர்	...	3	
684	,,	B. ரங்கஸாமி ஐயங்கார், காஞ்சீபுரம்	...	3	
			ஆக	51	8

21 JUL 1947.

Regd. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற
கீழ்க் கண்ட புஸ்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில்

விற்பனைக்குத் தயாராயிருக்கின்றன.

	சந்தாதாரர்களுக்கு ரூ. அ.	மற்றவர்கட்கு ரூ. அ.
1. ஸ்ரீ அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யாநத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	6—8	7—8
2. உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0–12	1—0
3. உக்தி நிஷ்டாபரணோத்யோதம் ,,	0—8	0–12
4. வீக்ஷாரண்ய க்ஷேத்ர மஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யாநம் (க்ரந்த லிபி)	... 1—0	1—8
5. ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி)	... 0—8	0–12
6. ஸ்ரீ வீரராகவ ஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—3	0—4
7. ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ஸங்க்ரஹம் (க்ரந்த லிபி)	2—0	3—0
8. ஈசாவாஸ்ய, கேந, கடோபநிஷத் (நாகர லிபி, தமிழ் மொழி பெயர்ப்புடன், 160 பக்கம்)	1—0	1—8

(தபால் செலவு வேறு)

வேண்டுபவர்கள்:—

மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,

நெ. 5, ராமஸ்வாமி தெரு, தியாகராய நகர், சென்னை.

என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

Printed by T. A. P. Srinivasavaradachariar, at Sri Sudarsana Press, 14, Sannidhi Street, L. Conjeeveram. Q. H. Ct. 36, (Supply) Edited and Published by S. Vasudevachariar, 5, Ramaswami Street, Tyagarayanagar, Madras.